Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள்: 06

விலை ரூபா: 3·50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY • மக்கள் தினசரி •

நாதம் 01 பிரமோதூத ஷு வைகாசி மீ 31 ஆம் உ வியாழக்கிழமை (14 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஃ 20 ஓசை 116

## மத்திய கிழக்கில் இருந்து வந்த இலங்கையரிடம் தங்கப் பாளங்கள்

(கொழும்பு)

மத்திய கிழக்கிலிருந்து நாடுதிரும்பிய ஒன்பது இலங்கையர்கள் ஒருகோடியே பத்துலட்சம் ரூபா பெறுமதியான இருநூற்றிப் பதின்மூன்று தங்கக் கட்டிகளை கடத்திவந்தபோது கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் உள்ள சுங்கப் பகுதியினரிடம் மாட்டிக் கொண்டனர்.

இவர்கள் இத்தங்கக் கட்டிகளைச் சிறிய குளிர்சாதனப் பெட்டியொன்றுக் குள்ளேயே மறைத்து வைத்துக் கடத்தி வந்துள்ளனர். கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் இவர்கள்மேல் சந்தேகம் கொண்ட சுங்கப்பகுதியினரின் விசாரணையைத் தொடர்ந்து விமான நிலையத்தின் சி. ஐ. டி. பிரிவினர் இத் தங்கப் பாளங்களைக் கண்டுபிடித்தனர்.

மத்திய கிழக்கில் தொழில் பார்க்கும் இலங்கையரின் (6ஆம் பக்கம் பார்க்க)

❋ போர் நிறுத்த உடன்பாடு மீறல் ❋ முப்படைகளும் தாக்குதல் ❋ பொலிஸ் ராணுவ நிலையங்கள் புலிகளிடம் ❋ போக்குவரத்து ஸ்தம்பிதம் ❋ மோதல்கள் தொடர்கின்றன ❋ கிழக்கில் முஸ்லிம் மக்கள் பலர் பலி

# யுத்த நிறுத்தம் மீறல்; போர் தொடர்கிறது!

# கிழக்கு, வடக்கில் புலிகள் முன்னேற்றம்!

(நமது நிருபர்கள்)

மட்டக்களப்பில் நான்கு தினங்களுக்குமுன் சிறிலங்கா சிங்களப் பொலிசாரினால் தொடக்கி வைக்கப்பட்ட மோதல் இன்று மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்மாவட்டங்களிலிருந்து சகல பொலிஸ்காரர்களையும் அங்கிருந்து விடுதலைப்புலிகள் வெளியேற்றி அந்தப் பொலிஸ் நிலையங்கள் அனைத்தையும் தம் வசமாக்கிக்கொள்ள வழிவகுத்தது விடுதலைப் புலிகள் மட்டக்களப்புத் தொடக்கம் யாழ்மாவட்டம் வரை சகல பொலிஸ் நிலையங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.

அதேவேளை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்தும் பல இராணுவத்தினர் தப்பியோடி விட்டனர். ஒன்றிரெண்டு இராணுவ முகாம்தவிர மற்றயைவை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளன.

நேற்று நண்பகலுடன் அமுலுக்கு வரவிருந்த போர் நிறுத்தத்தை அரசு மீறி கடற்படை, விமானப்படை, தரைப்படைகளை கிழக்கு வடக்கு மாகாணங்களுக்குத் தொடர்ந்து அனுப்பியதையடுத்து விடுதலைப்புலிகளும் போர் நிறுத்த உடன்பாட்டைப் பின்பற்றாமல் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

### போக்குவரத்து ஸ்தம்பிதம்

வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் கொழும்புக்குள்ள சகல போக்குவரத்து தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விட்டன. நேற்று நண்பகலுடன் வவுனியாத் தொலைபேசியும் துண்டிக்கப்பட்டு விட்டது.

## பரீட்சை வினாத் தாள்கள் தயாரிக்க தரப்படுத்த குழு

(கொழும்பு)

பரீட்சைத் திணைக்களம் சகல பரீட்சை வினாத்தாள்களையும் தயாரித்து தரப்படுத்துவதற்குகுழுவொன்றை நியமித்துள்ளது.

இவ்வாறான குழுவொன்று நியமிக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

அரசாங்க நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், கல்வி, உயர் கல்வி நிறுவனங்களில் கடமை புரிந்தவர்கள் அல்லது கடமைபுரிபவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபைகளுக்கு விரைவில் தேர்தல்

(கொழும்பு)

முந்நூற்றி எட்டு உள்ளூராட்சிசபைகளுக்கு விரைவில் தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுவருகின்றன. விரைவில் அவை கலைக்கப்படும். இவ்வாறு பொது நிர்வாக உள்நாட்டு மாகாண சபையின் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராநேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம், உள்ளூராட்சி சேவை, திருத்தச் சட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் சாரதி இராணுவத்தால் தாக்கப்பட்டார்

(வவுனியா)

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருக்கோணமலையிலிருந்து

## பொலிசாரின் ஆயுதங்களை விமானப்படை பறித்துச் சென்றது

(வவுனியா)

கிழக்கில் யுத்தம் தொடர்ந்து நடைபெற்று வரும் அதேவேளை வவுனியா பொலிஸ் நிலையத்தில் உள்ள

இருந்த பொலிசார் பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறி உள்ளனர். இவர்களில் சிங்கள பொலிசார் பொலிஸ் நிலையத்திலிருந்து இராணுவ

டான் பொலிஸ் நிலையத்திலிருந்து விடுதலைப் புலிகளால் பொலிசார் வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தற்போது விடு

## கிழக்கில் மோதல்கள் தொடர்கின்றன

கிழக்குப் பகுதியில் தமிமீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில்மோதல்கள்தொடர்ந்து நடைபெற்றுவரும் அதேவேளை கொழும்பிலிருந்து ரண்டு படைப்பிரிவுகள் கிழக்கு நோக்கி விரைந்து சென்று இப்பகுதிகளில் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணம் உள்ளன.

இருந்தும் கல்முனை கல்குடா ஆகிய பகுதிகளில் இருந்து முகாம்களை விட்டு இராணுவத்தினர் தப்பியோடியுள்ளனர். கும்புறுமூலைப் பகுதியில் யுத்தம் தொடர்ந்து நடந்துகொண்டிருப்பது குறிப்பிடதக்கதாகும்.

மேலும் சிறிலங்கா இராணுவம் தரை கடல் ஆகாய மார்க்கமாக இப்பகுதிகளில் முழு அளவில் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதும் குறிப்பிடதக்கதாகும்.

சிறிலங்கா அரசு சமாதான பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட அதேவேளை மேலும் கூடுதல் துருப்புகளை கிழக்கு மாகாணம் நோக்கி அனுப்பிவைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இவர்களும் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் கோட்டை பொலிஸ்நிலையங்களைச் சேர்ந்த ரிசேர்வ்பொலிஸ் படையைச் சேர்ந்தவர்

## குண்டு வீச்சில் 90பொலிசார் பலி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட பொலிஸ் நிலையம்ஒன்றில் தடுத்துவைக்

## பஸ் சாரதி இராணுவத்தால் தாக்கப்பட்டார்

(வவுனியா)

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருக்கோணமலையிலிருந்து யாழ். நோக்கிவந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பஸ் ஒன்று மடுக்கந்த பகுதியில் இராணுவத்தினரால் வழி மறிக்கப்பட்டு, அந்த பஸ்ஸின் சாரதி இராணுவத்தினர் சிலரால் தாக்கப்பட்டார்.

எதுவித காரணமும் இல்லாமல் தாக்கப்பட்ட சாரதி வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி அலுவலகத்தில் இது பற்றி முறையிட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக புலிகள் நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது. (தி)

ராநேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது குறிப் பிட்டார்.

உள்ளூராட்சி விசேட ஏற்பாடுகள் சட்ட மூலம், உள்ளூ ராட்சி சேவை, திருத்தச் சட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைச் செயலாளர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாணசபை செயலளார் ஈ. ஜே. சண்முகநாதன் நேற்று யாழ் மாநகர சபைக்கு விஜயம் செய்திருந்தார். இவர் தமது விஜயத்தின் போது யாழ். மாநகர சபையால் மேற்கொள்ளப் படும் புனருத்தாரண புனர் நிர்மாண வேலைகளுக்கு வேண்டிய ஒத்துழைப்புகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# விமானப்படை பறித்துச் சென்றது

(வவுனியா)

கிழக்கில் யுத்தம் தொடர்ந்து நடைபெற்று வரும் அதேவேளை வவுனியா பொலிஸ் நிலையத்தில் உள்ள பொலிசாரிடமிருந்து சகல ஆயுதங்களையும் சிறீலங்கா விமானப் படையினர் கைப் பற்றி சென்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிசார் பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறி உள்ளனர். இவர்களில் சிங்கள பொலிசார் பொலிஸ் நிலையத்திலிருந்து இராணுவ முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். தமிழ் பொலிசார் தாமாவே தமது வீடுகளுக்கு புறப்பட்டு சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திலிருந்து விடுதலைப் புலிகளால் பொலிசார் வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தற்போது விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் இருப்பதாக தெரியவருகிறது.

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் பொலிஸ் நிலைய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் கோட்டை பொலிஸ்நிலையங்களைச் சேர்ந்த ரிசேர்வ்பொலிஸ் படையைச் சேர்ந்தவர்கள் பலர் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலைப் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

## குண்டு வீச்சில் 90பொலிசார் பலி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட பொலிஸ் நிலையம்ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தொண்ணூறு பொலிஸ்காரர்கள் ஸ்ரீலங்கா விமானப்படையின் ஹெலிகளும், விமானங்களும் நடத்திய குண்டுவீச்சில் பலியானார்கள் என்று கூறப்படுகிறது.

# மூன்றுநாள் இராணுவ தாக்குதலில் முஸ்லிம்கள் பெருமளவில் பலி

(யாழ்ப்பாணம்)

மூன்று நாட்களாக கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு அம்பாறை ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா முப்படைகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் யுத்தங்களில் பெரும்தொகையான முஸ்லிம் பொதுமக்கள் உயிரிழந்துள்ளமைகுறிப்பிடத் தக்கதாகும்.

கெலிகொப்ரர் குண்டு வீச்சு விமானங்கள் உட்பட ஆட்டிலறி செல் தாக்குதல்களும் பெரும்பாலும் முஸ்லிம் பிரதேசங்களை அண்டியதாக இருந்ததால் இறந்து போனவர்களின் பெரும்பாலானோர் முஸ்லிம் மக்களாய் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்

இதனால் பெருந்தொகை மக்கள் பள்ளிவாசல்களிலும் பாடசாலைகளிலும் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களுக்கு தேவையான அத்தியா அவசிய பொருட்கள் போராளிகளால் வழங்கப்பட்டு வரும் அதே வேளை மருத்துவவசதிகளுக்காக வைத்தியசாலைகள் இருபத்துநான்குமணி நேரமும் விழிப்பாயுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ)

### கஷ்ட நிவாரணம்

## ஆசிரியருக்கு இல்லையாம் ஊழியர்களுக்கு உண்டாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றலாகி சென்ற ஆசிரியர்களுக்கும், ஆசிரிய பயிற்சிக்கு சென்ற ஆசிரியர்களுக்கும் கஷ்ட நிவாரண ஆறுமாத சம்பள முற்பணம் வழங்கப்படவில்லை.

இதற்காக இவர்கள் யாழ், கல்வித் திணைக்களத்துக்கு அலைந்து திரிகிறார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒவ்வொரு சாட்டுச் சொல்லி விடுகிறார்களாம்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி துண்டிப்பு

கிழக்குப் பகுதியில் தீர்மானிக்கப்பட்ட போர் நிறுத்தம் அமுல் படுத்தப்படாததைத் தொடர்ந்து வடபகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குளம் மகாவித்தியாலயம் இரு முதலிடங்களைப் பெற்றது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் புதுக்குளம் கொத்தணி மகாவித்தியாலயம் இரு நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தைப் பெற்றது:

கடந்த நான்காம் திகதி நடைபெற்ற மேற்படிபோட்டி நிகழ்ச்சியில், வில்லுப்பாட்டு கிராமிய நடனம் ஆகியவற்றில் புதுக்குளம் மகாவித்தியாலயம் முதலாம் இடங்களைப் பெற்றது.

புதிதாக நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்களின் முயற்சியினாலேயே குறிப்பிட்ட நிகழ்சிகளில் இப்பாடசாலை முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டது என்றும், இதற்காக அப் பயிலுநர் ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# சிங்கள இராணுவத் தாக்குதலால் 100 க்கு மேற்பட்ட பொதுமக்கள் பலி

''கடந்த மூன்று நாட்களாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 37 விடுதலைப்புலிகள் வீரமரணம் அடைந்துள்ளனர் சிங்கள இராணுவத்தின் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கை கூறுகிறது அறிக்கை முழு விபரம் வருமாறு;

கல்முனை, கல்குடா படை முகாம்கள்மீது விடுதலைப்புலிகள் நடத்திய தீவிர தாக்குதலைத்தொடர்ந்து அப்படை முகாம்களில் இருந்த சிங்களப் படையினர் பின்வாங்கி தப்பி ஓடிவிட்டனர்.

### குண்டுத்தாக்குதலும் ஷெல் அடியும்

ஸ்ரீலங்கா இராணுவம் ஆகாயத்திலிருந்து விமானமூலமும், உலங்கு வானூர்தி (ஹெலிகப்ரர்) மூலமும் குண்டு வீசி பல இடங்களில் தாக்கி வருகின்றன. இது தவிர கடலிலிருந்தும் சிங்களப்படை முகாம்களிலிருந்தும் பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது எறிகணை (ஷெல்) தாக்குதல்களும் நடைபெறுகின்றன.

சிங்களப் படைத் தாக்குதலால் கல்முனை, வாழைச்சேனைப் பகுதிகளில் பல முஸ்லிம் மக்கள் கொல்லப் பட்டுள்ளனர். அவர்களின் பல வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

### ஒரு கோவில் தகர்க்கப்பட்டுள்ளது

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிள்ளையார் கோவிலொன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டபின் நூறுக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். மத்தியமுகாமைச் (சென்றல்) சுற்றியுள்ள பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல பெண்கள் பாலியல் வன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நஷ்டஈடு வழங்குவதற்கு அரச அதிபர்களுக்கு அதிகாரம்

(மட்டக்களப்பு)

வன்செயல்கள், அசம்பாவிதங்களின் போது இராணுவம், அல்லது வேறு பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டவர்களுக்கான நஷ்டஈடு வழங்குவதற்கான தீர்மானத்தை அரச அதிபர் எடுக்க முடியும்.

இத்தகவலை புனர்வாழ்வு அமைச்சு திட்டமிடல் பணிப்பாளர் திரு ரி. லங்காநேசன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். செயலகத்தில்

# கீழ்நிலை உத்தியோகஸ்தர்கள் விண்ணப்பங்கள் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக உயர் உத்தியோகத்தர்கள்பாதிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தருக்கானநஷ்டஈட்டுப்பணம்பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்கப்பட்டுள்ள அதேவேளைசெயலககீழ்நிலை உத்தியோகத்தர்களின் நஷ்டஈட்டு விண்ணப்பங்கள் கவனிக்கப்படாத நிலையில் இருந்து வருகிறது.

பாதிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான நஷ்டஈடு வழங்குவதற்காக 1989ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதுவரை எழுபது விண்ணப்பங்கள் வந்துள்ளன. இவற்றில் அறுபதுபேர் கீழ்நிலைஅரசாங்க உத்தியோகத்தர்கள் இந்த அறுபதுபேரில் சிலர் வன்செயல்களினால்பாதிப்பிற்குள்ளாகி இன்னும் வதிவிடம்இல்லாமல் வாடகை வீடுகளில் தங்கிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

1989ஆம் ஆண்டில்கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தில் இன்றுவரைஇவர்களுக்குஎந்தவித நஷ்டஈடுகளும் கிடைக்கவில்லை ஆனால் தென்னிலங்கைப் பகுதியில் வேலைபார்க்கும் வடபகுதி உத்தியோகத்தர்கள்இத்திட்டத்தின்கீழ்நஷ்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவு மாவட்ட சிற்றூரவைகள்

# நிர்வாக உறுப்பினர்களின் பட்டியல்

**முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் கிராம ரீதியாக அமைக்கப்பட்ட சிற்றூரவைகளினால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளது பெயர்ப்பட்டியல்**

கருவேலன் கண்டல் கி. சே. உ. பிரிவு, ஒட்டுசுட்டான்.

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | க. ஜெயசீலன் |
| 2. | செயலாளர் | சி. திருநாவுக்கரசு |
| 3. | பொருளாளர் | க. பாலசுந்தரம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | தி. கமலாம்பிகை |
| 5. | நிர்வாக உறுப்பினர் | செ. தட்சணாமூர்த்தி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | ம. தவமணி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | வே. ஜெயானந்தன் |

1 ஆம் படிவம் வலதுகரை, கணேசபுரம், முத்தையன்கட்டு.

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | செ. கந்தசாமி |
| 2. | செயலாளர் | சு. நடராசா |
| 3. | பொருளாளர் | சோ. சுதந்திரன் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | ஆ. சதாசிவம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | இ. தனபாலசிங்கம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | க. சிவலிங்கம் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | சோ. சறோசா |

புளியங்குளம் கி. சே. உ. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | அ. யோகரட்னம் |
| 2. | செயலாளர் | சி. சின்னராசா |
| 3. | பொருளாளர் | சு. மணிவண்ணன் |
| 4 | நிர்வாக உறுப்பினர் | செ. தர்மலிங்கம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | தெ. சறோசினிதேவி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | சி, பழனியாண்டி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | வ. ஜெயமோகன் |

வலதுகரை வித்நியாபுரம் முத்துஐயன்கட்டு கி. சே. உ. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சி. திருநாவுக்கரசு |
| 2. | செயலாளர் | இ. சற்குணம் |
| 3. | பொருளாளர் | வே. சம்பசிவம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | திருமதி அ. மனோரஞ்சிதம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | சு. பிள்ளைநாயகம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | வே. வினாயகமூர்த்தி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | நா. தனபாலசிங்கம் |

தட்டயமலை

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | அ. உக்கிரவேல் |
| 2. | செயலாளர் | இ. சுந்தரமூர்த்தி |
| 3. | பொருளாளர் | க. நவரத்தினராசா |
| 4. | நிர்வாக உறுப்பினர் | செ. வீரண்ணன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | நா. சின்னத்தம்பி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | த. முருகையா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | வ. நாகராசா |

3 ஆம் கண்டம், இடதுகரை கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | க. தர்மராசா |
| 3. | பொருளாளர் | [illegible] |
| 4. | நிர்வாக உறுப்பினர் | பே சந்திரகாசன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | ப. மகேந்திரன் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | வீ. தங்கேஸ்வரி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | சு. தியாகராசா |

பண்டாராவன்னி கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சீ. வேலாயுதம் |
| 2. | செயலாளர் | ந. சந்திரசேகரன் |
| 3. | பொருளாளர் | த. செல்லையா |
| 4. | நிர்வாக உறுப்பினர் | பொ. சந்திரசேகரம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | கா. குணபாலசிங்கம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | [illegible] |

4 ஆம் யூனிற் கி. சே. உ. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | வே. சுப்பிரமணியம் |
| 2. | செயலாளர் | தி. ஜெயராசா |
| 3. | பொருளாளர் | ச. ரவீந்திரன் |
| 4. | உபதலைவர் | ச. கிருஸ்ணசிங்கம் |
| 5. | உபசெயலாளர் | க. பொன்னம்பலம் |
| 6. | நி. உறுப்பினர் | பி. எஸ். பாலசிங்கம் |
| 7. | ,, | சண்முகநாதன் |

அனிஞ்சியங்குளம் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ந. சி. பரம்சோதி |
| 2. | செயலாளர் | வி. யோகலிங்கம் |
| 3. | பொருளாளர் | மு. கந்தையா |
| 4. | உபதலைவர் | கமலாதேவி |
| 5. | உபசெயலாளர் | செ. இராசலிங்கம் |
| 6. | நி. உறுப்பினர் | செ. விசுவலிங்கம் |
| 7. | ,, | பெ. ராமகிருஸ்ணன் |

தெறாகண்டல் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | அ. செல்லத்துரை |
| 2. | செயலாளர் | வீ. ரங்கையா |
| 3. | பொருளாளர் | கிருஸ்ணன் |
| 4. | உபதலைவர் | முருகேஸ் |
| 5. | உபசெயலாளர் | க. அன்னபூரணம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | பா. இராசமணி |
| 7. | ,, ,, | நித்தியானந்தம் |

ஒட்டருத்த குளம் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ச. சிவானந்தம் |
| 2. | செயலாளர் | வீ. பரராசசேகரம் |
| 3. | பொருளாளர் | சு. திசைவீரசிங்கம் |
| 4. | உபதலைவர் | சி. இந்திராதேவி |
| 5. | உபசெயலாளர் | க. கணேஷ் |
| 6. | நி. உறுப்பினர் | ஐ. கோபாலசிங்கம் |
| 7. | ,, | க. இந்துமதி |

3 ஆம் யூனிற் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | நா. சண்முகம் |
| 2. | செயலாளர் | வே. முருகேசு |
| 3. | பொருளாளர் | சி. செல்லத்துரை |
| 4. | உபதலைவர் | க. ஜகதீஸ்வரன் |
| 5. | உபசெயலாளர் | சி. மனோன்மணி |
| 6. | நி. உறுப்பினர் | வே. ஸ்ரீஸ்கந்தராசா |
| 7. | ,, | செல்வநாயகம் |

தென்னியங்குளம் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | [illegible] |
| 2. | செயலாளர் | சு. பாலசிங்கம் |
| 3. | பொருளாளர் | த. வயராணி |
| 4. | உபதலைவர் | சி. நவரத்தினம் |
| 5. | உபசெயலாளர் | சி. நடராசா |
| 6. | நி. உறுப்பினர் | இ. மோகனசுந்தரம் |
| 7. | ,, | கங்காதரன் |

அம்பலப்பெருமாள் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | கி. கந்தசாமி |
| 2. | செயலாளர் | வீ. திருச்செல்வம் |

| | | |
|---|---|---|
| 4. | உபதலைவர் | ந. தேவிகாராணி |
| 5. | உபசெயலாளர் | ச. கந்தசாமி |
| 6. | நி. உறுப்பினர் | ஐ. பசுபதிப்பிள்ளை |
| 7. | ,, | சி. நடராசா |

பொன்நகர் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ச. வேலாயுதம்பிள்ளை |
| 2. | செயலாளர் | பெ. மோகன் |
| 3. | பொருளாளர் | வெ. லோகேந்திரன் |
| 4. | உபதலைவர் | த. பத்மநாதன் |
| 5. | உபசெயலாளர் | ச. கிருபாகரன் |
| 6. | நி. உறுப்பினர் | செ. பாக்கியவதி |
| 7. | ,, | கோ. வரதன் |

பூவரசங்குளம் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | மு. புவனேஸ்வரராசா |
| 2. | செயலாளர் | சி. யோகராசா |
| 3. | பொருளாளர் | கு. புனிதமலர் |
| 4. | உபதலைவர் | இ. கந்தையா |
| 5. | உபசெயலாளர் | சி. சுந்தரேஸ்வரன் |
| 6. | நி. உறுப்பினர் | வே. அமராவதி |
| 7. | ,, | ம. குணசிங்கம் |

வட்டுவாகல் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | செ. விவேகானந்தம் |
| 2. | செயலாளர் | இ. துரைசிங்கம் |
| 3. | பொருளாளர் | சொ. யோகேந்திரராசா |
| 4. | உப தலைவர் | செ. தங்கராசா |
| 5. | உப செயலாளர் | வி. ஜெயராணி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | க. திருச்செல்வம் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | ந. செல்வரத்தினம் |

மேற்கு முள்ளிவாய்க்கால் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | கு. இளையதம்பி |
| 2. | செயலாளர் | ம. இராசப்பு |
| 3. | பொருளாளர் | மு. சுப்பிரமணியம் |
| 4. | உப தலைவர் | யோ. தாவீது |
| 5. | உப செயலாளர் | சு. செல்வராசா |
| 6. | நிர்வாக உறுப்பினர் | அ. பொன்னம்மா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | வே. சபாநாயகி. |

பொக்கணை கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ந. பாலதாஸ் |
| 2. | செயலாளர் | சு. குணலிங்கம் |
| 3. | பொருளாளர் | சி. இராசசேகரம் |
| 4. | உப தலைவர் | செ. யோகராசா |
| 5. | உப செயலாளர் | தை. நவரத்தினம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | க. வல்லிபுரம் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | அ. செல்வநாயகம் |

இரணைப்பாலை கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | அ. செலஸ்தீன் |
| 2. | செயலாளர் | யோ. அன்ரன்குரூஸ் |
| 3. | பொருளாளர் | பி. ஸ்ரனிஸ்லாஸ் |
| 4. | உப தலைவர் | கி. துரைரட்ணம் |
| 5. | உப செயலாளர் | அ. சந்திரப்பிரகாஸ் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | பா. சரசு |
| 7. | நிர்வாக உறுப்பினர் | சா. மாலதி |

ஆனந்தபுரம் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | திருமேனி |
| 2. | செயலாளர் | செ. ஜெயக்கொடி |
| 3. | பொருளாளர் | இராசேந்திரம் |
| 4. | உப தலைவர் | சுந்தரலிங்கம் |
| 5. | உப செயலாளர் | பத்ரிமாறானி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | எஸ். செல்லையா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | வி. வியாளம்மா |

கோம்பாவில் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | மு. சித்திவினாயகம் |
| 2. | செயலாளர் | தா. சண்முகநாதன் |
| 3. | பொருளாளர் | இ. பாலசிங்கம் |
| 4. | உப தலைவர் | ம. சிவயோகம் |
| 5. | உப செயலாளர் | சி. யோகராணி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | சி. கணேசமூர்த்தி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | நா. சின்னராசா |


**வரி விளம்பரம்**

### தவறிவிட்டது

மணிபல்லவம் 11ஆம் வட்டாரம், புங்குடுதீவிலுள்ள இராமலிங்கம் முரளிதரன் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். மே/பா. ஈழநாதம், 31. வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

இன்றுமுதல்
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.3
சனி ஞாயிறு
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
STUART STEEN PEDRO HUGHES BENARD GEVRTS
**THE THUNDERING NINJA**
(கராட்டிப் படம்)
சினிமாஸ் கோப்

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-45, 9-45
ரஜனி, அம்பிகா, ஜெயசங்கர் சுஜாதா, நாகேஸ் நடித்த
**மாவீரன்**
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற விசு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த
A.V.M. இன்
**சம்சாரம் அது**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | அ. உக்கிரவேல் |
| 2. | செயலாளர் | இ. சுந்தரமூர்த்தி |
| 3. | பொருளாளர் | க. நவரத்தினராசா |
| 4. | நிர்வாக உறுப்பினர் | செ. வீரண்ணன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | நா. சின்னத்தம்பி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | த. முருகையா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | வ. நாகராசா |

### 3 ஆம் கண்டம், இடதுகரை கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | க. தர்மராசா |
| 2. | செயலாளர் | சி. அழகநாயகம் |
| 3. | பொருளாளர் | வே. தியாகராசா |
| 4. | நிர்வாக உறுப்பினர் | பே சந்திரகாசன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | ப. மகேந்திரன் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | வீ. தங்கேஸ்வரி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | சு. தியாகராசா |

### பண்டாராவன்னி கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சீ. வேலாயுதம் |
| 2. | செயலாளர் | ந. சந்திரசேகரன் |
| 3. | பொருளாளர் | த. செல்லையா |
| 4. | நிர்வாக உறுப்பினர் | பொ. சந்திரசேகரம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | கா. குணபாலசிங்கம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | வே. லோகேந்திரன் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | செல்வி சி. நளினி |

### கூழமுறிப்பு கி. சே. பணிப்பாளர் பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சு. விநாயகமூர்த்தி |
| 2. | செயலாளர் | நா. ஐயாத்துரை |
| 3. | பொருளாளர் | சி. சற்குணம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | சி. இரவீந்திரன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | கா. இராசரத்தினம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | சி. தேவராசா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | திருமதி ம. குலமணி |

### 2 ஆம் கண்டம் இடதுகரை கனகரத்தினபுரம் கி. சே. உ. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சு. நித்தியானந்தன் |
| 2. | செயலாளர் | டொ. அருமைச்சந்திரன் |
| 3. | பொருளாளர் | சி. லோகநாதன் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | சி. தம்பையா |
| 5. | நிர்வாக உறுப்பினர் | வை. வள்ளியம்மா |
| 6. | நிர்வாக உறுப்பினர் | க. வெள்ளைச்சாமி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | லோகநாதன் |

### 2 ஆம் கண்டம் வலதுகரை கி. ப. பிரிவு முத்துஐயன்கட்டு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ம. மாயவன் |
| 2. | செயலாளர் | செல்வன் கி. செந்தில்செல்வன் |
| 3. | பொருளாளர் | வே. சந்திரசேகரன் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | கெ. மகாலிங்கம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | க. கந்தசாமி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | தா. நவரெட்ணம் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | செல்வி. வி. சித்திராதேவி |

### ஒட்டுசுட்டான் க. சே. பகுதி

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சு. யோகராசா |
| 2. | செயலாளர் | சி. மகேஸ்வரன் |
| 3. | பொருளாளர் | த. திருச்செல்வம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | எம். பாலாஜி |
| 5. | நிர்வாக உறுப்பினர் | திருமதி. கி. திருமலர் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | நா. குலசிங்கம் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | ரெ. சத்திவேல் |

### 5 ஆம் யூனிற் கி. சே உ. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ச. செல்வரத்தினம் |
| 2. | செயலாளர் | தி. கிரிதரன் |
| 3. | பொருளாளர் | சி. ரகுநாதன் |
| 4. | உபதலைவர் | சி. சுப்பிரமணியம் |
| 5. | உபசெயலாளர் | சோ. பாலச்சந்திரன் |
| 6. | நி. உறுப்பினர் | ஆ. ஜெயராணி |
| 7. | ,, | பொ. பாலசிங்கம் |

### துணுக்காய் கி. சே. உ. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | க. வ. கமலேஸ்வரன் |
| 2. | செயலாளர் | க. இராசநாயகம் |
| 3. | பொருளாளர் | தி. இரவீந்திரன் |
| 4. | உபதலைவர் | ந. சிவயோகமலர் |
| 5. | உபசெயலாளர் | வி. கணபதிப்பிள்ளை |
| 6. | நி, உறுப்பினர் | சி. கணேசமூர்த்தி |
| 7. | ,, | அ. குலசேகரம் |

### 3 ஆம் யூனிற் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | நா. சண்முகம் |
| 2. | செயலாளர் | வே. முருகேசு |
| 3. | பொருளாளர் | சி. செல்லத்துரை |
| 4. | உபதலைவர் | க. ஜகதீஸ்வரன் |
| 5. | உபசெயலாளர் | சி. மனோன்மணி |
| 6. | நி. உறுப்பினர் | வே. ஸ்ரீஸ்கந்தராசா |
| 7. | ,, | செல்வநாயகம் |

### தென்னியங்குளம் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | டா. பாக்கியநாதன் |
| 2. | செயலாளர் | சு. பாலசிங்கம் |
| 3. | பொருளாளர் | த. வயராணி |
| 4. | உபதலைவர் | சி. நவரத்தினம் |
| 5. | உபசெயலாளர் | சி. நடராசா |
| 6. | நி. உறுப்பினர் | இ. மோகனசுந்தரம் |
| 7. | ,, | கங்காதரன் |

### அம்பலப்பெருமாள் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | கி. கந்தசாமி |
| 2. | செயலாளர் | வீ. திருச்செல்வம் |
| 3. | பொருளாளர் | சி. சுந்தரராசா |
| 4. | உபதலைவர் | சி. தேவராசா |
| 5. | உபசெயலாளர் | பொ. யோகேந்திரம் |
| 6. | நி. உறுப்பினர் | மா. இராமச்சந்திரன் |
| 7. | ,, | சீ. வேதநாயகம் |

### கோட்டை கட்டியகுளம் கி. சே பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | இ. தங்கராசா |
| 2. | செயலாளர் | க. கணேசலிங்கம் |
| 3. | பொருளாளர் | வி. பாலசிங்கம் |
| 4. | உபதலைவர் | சு. புவனேஸ்வரி |
| 5. | உபசெயலாளர் | வே. கண்ணதாசன் |
| 6. | நீ. உறுப்பினர் | கா. சுந்தர் |
| 7. | ,, | ச. மார்க்கண்டு |

### உயிலங்குளம் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சி. தங்கராசா |
| 2. | செயலாளர் | கு. நவபாலகுமார் |
| 3. | பொருளாளர் | செ. கனகலிங்கம் |
| 4. | உபதலைவர் | கோகுலகுமாரி |
| 5. | உபசெயலாளர் | சு. சத்தியா |
| 6. | நி. உறுப்பினர் | நா. சர்வலோகநாயகி |
| 7. | ,, | க. விஜயகுமார் |

### 2 ஆம் யூனிற் 1ஆம் யூனிற் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ப. பத்மநாதன் |
| 2. | செயலாளர் | சி சித்திரா |
| 3. | பொருளாளர் | மு. சிவானந்தம் |
| 4. | உபதலைவர் | செ. செல்வசீலன் |
| 5. | உபசெயலாளர் | வெ யோகதாசன் |
| 6. | நி. உறுப்பினர் | சி. செல்வச்சந்திரன் |
| 7. | ,, | காசிப்பிள்ளை |

### நட்டாங்கண்டல் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | த. இராசலிங்கம் |
| 2. | செயலாளர் | ஆ. ஸ்ரீஸ்கந்தராசா |
| 3. | போருளாளர் | ஐ. அருட்செல்வம் |
| 4. | உபதலைவர் | செ. கணபதிப்பிள்ளை |
| 5. | உபசெயலாளர் | இ. கலையரசி |
| 6. | நி. உறுப்பினர் | செல்வகுமார் |
| 7. | ,, | ந. விநோதன் |

### பாண்டியங்குளம் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | வே. இராசையா |
| 2. | செயலாளர் | ப. கந்தையா |
| 3. | பொருளாளர் | பொ. நவரட்ணம் |
| 4. | உபதலைவர் | பே. செல்லக்கண்டு |
| 5. | உபசெயலாளர் | அ. நாகபூஷணி |
| 6. | நி. உறுப்பினர் | க. ஆனந்தலிங்கம் |
| 7. | ,, | க. மாணிக்கம் |

### கரும்புள்ளியான் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சு. செல்வரட்ணம் |
| 2. | செயலாளர் | சி. சண்முகலிங்கம் |
| 3. | பொருளாளர் | கா. வல்லிபுரம் |

| | | |
|---|---|---|
| 6. | நிர்வாக உறுப்பினர் | பா. சரசு |
| 7. | நிர்வாக உறுப்பினர் | சா. மாலதி |

### ஆனந்தபுரம் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | திருமேனி |
| 2. | செயலாளர் | செ. ஜெயக்கொடி |
| 3. | பொருளாளர் | இராசேந்திரம் |
| 4. | உப தலைவர் | சுந்தரலிங்கம் |
| 5. | உப செயலாளர் | பத்ரிமா றானி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | எஸ். செல்லையா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | வி. வியாளம்மா |

### கோம்பாவில் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | மு. சித்திவினாயகம் |
| 2. | செயலாளர் | தா. சண்முகநாதன் |
| 3. | பொருளாளர் | இ. பாலசிங்கம் |
| 4. | உப தலைவர் | ம. சிவயோகம் |
| 5. | உப செயலாளர் | சி. யோகராணி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | சி. கணேசமூர்த்தி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | நா. சின்னராசா |

### புதுக்குடியிருப்பு மேற்கு. கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | மு. சிவப்பிரகாசம் |
| 2. | செயலாளர் | தி. கிருஸ்ணபவானி |
| 3. | பொருளாளர் | இ. கெங்காதரன் |
| 4. | உப தலைவர் | சிவசோதி. பூமணி |
| 5. | உப செயலாளர் | சு. நேசரத்தினம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | ந. உருத்திராதேவி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | எஸ். சின்னையா |

### புதுக்குடியிருப்பு கிழக்கு. கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | க. நடராசா |
| 2. | செயலாளர் | சி. றீற்றா |
| 3. | பொருளாளர் | ச. மைக்கல் திலகராசா |
| 4. | உப தலைவர் | ந. செல்வராசா |
| 5. | உப செயலாளர் | கே. எம். முத்துலிங்கம் |
| 6. | நி. உறுப்பினர் | மேரிபுளோரின் |
| 7. | நி. உறுப்பினர் | தே. தமியாம்பிள்ளை |

### சிவன் நகர் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ந. இரத்தினசிங்கம் |
| 2. | செயலாளர் | பொ. சிவசிதம்பரம் |
| 3. | பொருளாளர் | வெ. தருமலிங்கம் |
| 4. | உப தலைவர் | க. சுந்தரலிங்கம் |
| 5. | உப செயலாளர் | சு. ஸ்ரீமகாலட்சுமி |
| 6. | நி. உறுப்பினர் | ச. சாந்தினிதேவி |
| 7. | நி. உறுப்பினர் | மா. சண்முகநாதன் |

### மந்துவில் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | செ. எட்வேட் |
| 2. | செயலாளர் | ம. சூசைப்பிள்ளை |
| 3. | பொருளாளர் | ஆர். மரியரட்ணம் |
| 4. | உப தலைவர் | திருமதி. என். நாகேந்திரன் |
| 5. | உப செயலாளர் | பி. இருதயராணி |
| 6. | நி. உறுப்பினர் | பி. அருமைநாயகம் |
| 7. | நி. உறுப்பினர் | சூ. அல்பிரட் |

### மல்லிகைத்தீவு கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சூ. ஆரோக்கியநாதர் |
| 2. | செயலாளர் | சூ. சந்தியாப்பிள்ளை |
| 3. | பொருளாளர் | அ. பரமதாஸ் |
| 4. | உப தலைவர் | சி. மரியமலர் |
| 5. | உப செயலாளர் | சி. ஜெகநாதன் |
| 6. | நி. உறுப்பினர் | ம. பணாண்டோ |
| 7. | நி. உறுப்பினர் | யோ. ஞானப்பழம் |

### வள்ளிபுனம் கி. சே. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | அ. ஜோஜ்வாசின்டன் |
| 2. | செயலாளர் | ஐ. மாதவராசா |
| 3. | பொருளாளர் | க. மனோகரலிங்கம் |
| 4. | உப தலைவர் | ஆர். சிதம்பரநாதன் |
| 5. | உப செயலாளர் | நா. தேவமனோகரி |
| 6. | நி. உறுப்பினர் | ஆர். வெங்கிட்ராமன் |
| 7. | நி. உறுப்பினர் | அ. ஜீவகன் |

(தொடரும்)

10-30, 2-30, 6-45, 9-45
ரஜனி, அம்பிகா,
ஜெயசங்கர் சுஜாதா,
நாகேஸ் நடித்த
**மாவீரன்**
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
ஜனாதிபதியின் தங்கப்
பதக்கம் பரிசு பெற்ற
விசு, லக்ஷ்மி, ரகுவரன்,
இளவரசி நடித்த
A.V.M. இன்
**சம்சாரம் அது
மின்சாரம்**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன
ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது

06. 06. 90
**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 6.30, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
M.G.R, ஜெயலலிதா,
அசோகன், சுந்தரராஜன்,
பண்டரிபாய், சோ
நடித்த
**தேடிவந்த
மாப்பிள்ளை**
(புதிய பிரதி)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி,
கார்த்திக்
நடித்த
**மௌனராகம்**
குறிப்பிட்ட சில தினங்கள்
மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்

## மணிப்பூரில் 200 பேருக்கு 'எயிட்ஸ்' நோய் பீடித்துள்ளது

(மணிப்பூர்)

மணிப்பூர் பகுதியில் ஆட்கொல்லி எயிட்ஸ் நோயினால் இருநூறு பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய குடும்பநல சுகாதார அமைச்சர் மசூர் தெரிவித்துள்ளார்.

இதற்காக மத்திய அரசு முப்பத்திமூன்று லட்சம் ரூபா மாநில அரசுக்கு வழங்கும் எனவும் அவர் கூறினார்.

இந்த நோய் பரவாது தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக சொன்ன அவர் வளர்ச்சியடைந்த நாடுகளிடமிருந்து மூன்றுகோடி டாலர் உதவி கிடைக்கும் என்றார்.

## ஜெயலலிதாவுக்கு எதிரான மனு உயர் நீதிமன்றம் தள்ளுபடி

(சென்னை)

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகபொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா சட்டசபைத் தேர்தலில் தெரிவானது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேப மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

போடிநாயக்கலூர் தொகுதியில் கடந்த வருடம் நடைபெற்ற தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் இவர் வெற்றி பெற்றிருந்தார்.

செல்வி ஜெயலலிதாவுடன் போட்டியிட்டு தோல்வியடைந்த திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

# சோவியத்யூனியனில்இனி பத்திரிகைகள் சுதந்திரம்

(மாஸ்கோ)

சோவியத் ரஷ்யாவில் பத்திரிகைகளுக்கு சுதந்திரம் வழங்கும் மசோதா பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

பத்திரிகை சுதந்திரம், பத்திரிகையாளர்களின் உரிமைகள் ஆகியவற்றுக்கு விரிவான உத்தரவாதத்தை இந்தச் சட்டம் அளிக்கிறது என்று சோவியத்தின் 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

1985இல் ஜனாதிபதி கொர்பசேவ் ஆட்சிக்கு வந்ததுமுதல் சோவியத்தில் வெகுஜனத் தொடர்புத் துறையில் உறுதியான கட்டுப்பாட்டை சோவியத் அரசு கொண்டிருந்தது.

இதுவரை அரசாங்கத்துக்கு எதிரானசெய்திகள் தணிக்கை செய்யப்பட்டிருந்தன. இதற்காக தணிக்கை அதிகாரிகள் பணிபுரிந்து வந்தனர்.

புதிய சட்டப்படி பத்திரிகையாளர்களை தாக்குவோர் தீங்கு விளைவிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இனிமேல் சுதந்திரமாக தொடர்பு சாதனங்களும், பத்திரிகைகளும் இயங்க இதுவழி வகுக்குமென அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சல்மான் ருஷ்தியால் பிரிட்டன்-ஈரான் உறவு பாதிப்பு

(தெஹ்ரான்)

ஈரானுடன் உறவுகளை மீண்டும் ஏற்படுத்த பிரிட்டன் விரும்பும் அதேவேளையில் சல்மான் ருஷ்தியின் பிரச்சினையால் இந்த முயற்சிகள் பாதிக்கப்படும் என ஈரானிய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈரானிய மதத்தலைவர் அலி கொமேனியின் வேண்டுகோளை பிரிட்டன் நிறைவேற்ற வேண்டுமெனவும் அவர் கூறினார்.

உலகில் உள்ள முஸ்லிம்களைப் புண்படுத்தும் சல்மான் ருஷ்திக்கு மரணதண்டனை விதிக்கவேண்டும் என ஈரானிய மதத்தலைவர் பிரிட்டனிடம் கேட்டுவருகிறார்.

சல்மான் ருஷ்தி பிரிட்டனில் தலைமறைவாக வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

### உலக பாரம்தூக்கும்போட்டி

(தப்ரிஸ்)

ஈரானிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உயர் கல்லூரி பாரம் தூக்கும் வீரர்கள் குழு ஒன்று ஜூன் பிற்பகுதியில் மாஸ்கோவில் நடைபெறும் உலக சம்பியன்ஷிப் போட்டியில் பங்கு பற்றுவர்.

பிலிப்பைன்சில்

## புதிய அரசியல் இயக்கம் அக்கினோ ஆரம்பித்தார்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி கொரொஸோன் அக்கினோ புதிய அரசியல் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

தமது ஆதரவாளர்களும், அதிகாரிகளும் பிலிப்பைன்ஸ் அரசுக்கு விசுவாசமாக இருக்கவில்லை என்றும் அவர் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இதற்காகவே இந்த அரசியல் இயக்கத்தை தாம் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் சொன்னார்,

மணிலாவில் சுதந்திரதின அணிவகுப்பில் சுமார் இருபதாயிரம் மக்கள் முன்னிலையில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி உரையாற்றினார்.

இது ஒரு அரசியல் கட்சியல்ல என்றும் அரசியல் தொடர்பான இயக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் அரசுக்கு மக்கள் ஆதரவு தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

## பங்களாதேஷின் அபிவிருத்திக்கு பட்ஜெட்டில் புதிய வரிகள்

(டாக்கா)

பங்களாதேஷில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி திரட்ட புதிய யோசனை ஒன்றை நிதியமைச்சு அடுத்த வரவு செலவு திட்டத்தில் கொண்டு வரவுள்ளது.

இதன்படி கடுமையான வரி விதிப்புக்கள் வரவு செலவுத் திட்டத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

அண்மைக்கால வெள்ளம் புயல் நடவடிக்கைகளால் பங்களாதேஷ் பலமுறை பாதிக்கப்பட்டுள்ளதால் அங்கு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வெளிநாட்டு உதவிகள் போதாது இருப்பதால் இவ்வாறு புதிய வரி விதிப்புக்கள் மூலம் உள்நாட்டிலேயே நிதி சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பறக்கும் மீன்கள்!

பறக்கும் மீன்கள் பொதுவாக உலகின் எல்லாக் கடல்களிலும் அரிதாக காணப்படுகின்றது. மீன்கள் பறக்கும் செய்தி நமக்கு ஆச்சரியத்தை ஊட்டினாலும்கூட பார்ப்பதற்கு பரவசமாகவே இருக்கும்.

இவ்வகை மீன்கள் 5 சென்ரி மீற்றர் முதல் 45 சென்ரி மீற்றர் வரையிலான நீளம் வரை வளர்கின்றது. இவை தமது துடுப்புக்களின் (Fins) உதவியினால் பறக்க முடிகின்றது. பறக்கும்போது துடுப்புக்கள் விரிவடைகின்றன. இவை 365 மீற்றர் தூரம் வரை பறக்கக்கூடியதாகும்.

பறக்கும் விரியும் துடுப்புக்களை இம்மீன்கள் தசைநார்களின் உதவியினால் விறைப்பாக வைத்துக்கொள்கின்றன. அலைகளில் மோதிக்கொண்டு நீருக்குமேல் பறக்கின்றன. அலைகளில் மோதுவதால் அதிகப்படியான சக்தியைப் பெற்று அதிக தூரம் பறக்கின்றது.

கடல் மட்டத்தில் இருந்து கப்பலின் மேல் தளம் வரையிலான உயரத்தில் இம் மீன்கள் பறக்கக்கூடியதாகவுள்ளது. அதிக பட்சம் 365 மீற்றர் தூரம் வரை பறக்கும் கப்பலின் மேல் தளத்திற்கு இம் மீன்கள் பறந்து வரும்போது கப்பலில் உள்ளோர் இவற்றைப் பிடித்து உணவுக்காக சமைத்து விடுவதுமுண்டு.

ஆகாய விமானங்கள் விமானத் தளத்தில் ஓடிய பின்னர் மேலே எழும்புவதுபோல இம் மீன்கள் துடுப்பு போன்ற முன் உறுப்புக்களை விரித்துக் கொண்டு மேலே எழும்பி காற்றில் பறக்கின்றதாம்.

## உலகில் பேசப்படும் மொழிகள்

உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. சில மொழிகள் பேச்சு வழக்...

1. சீனமொழி - 72.6 கோடி
2. ஆங்கில மொழி - 39.7 கோடி
3. ரஷ்ய மொழி - 27.4 ...

# இரசாயன ஆயுதங்களும் இரு பெரும் வல்லரசுகளும்

இன்று இரு பெரும் வல்லரசுகளாகத் திகழும் ஐக்கிய அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் இரசாயன ஆயுதக் கையிருப்பில் முதன்மை பெற்ற நாடுகளாக விளங்குகின்றன.

நவீன போர்த் தாக்குதலின் போது பயன்படுத்தப்படும் குண்டுகள் மனித, மற்றும் உயிரினங்களை, கட்டடங்களை அழித்து விடுகின்றன என்பது யாவருக்கும் தெரிந்த விடயமாகும்.

ஆனால் இந்த இரசாயனக் குண்டுகளோ மனிதனைக் கொல்லாமல் கொல்லுகின்றன, சித்திரவதை செய்கின்றன. காற்றை நஞ்சாக்குகின்றது, பயிர் பச்சைகளைக் கூட அழித்து விடுகின்றது.

இரசாயன ஆயுதங்களின் கொடுமையினைப்பற்றி அமெரிக்காவில் இருந்து வெளி...

...டன் அவரது ஆவி பிரியும்''. இத்தகைய கொடிய ரசாயன ஆயுதங்களை உலகம் வெறுக்கின்றது. எனவேதான் இரு பெரும் வல்லரசுகளும், தாங்களும் வெறுப்பதாகக் காட்டிக் கொள்கின்றன.

ஆனால் அமெரிக்காவிடமும் சோவியத்ரஷ்யாவிடமும் முழு உலகையும் பூரணமாக நிர்மூலம் செய்துவிடக்கூடிய ராசயன ஆயுதங்கள் கையிருப்பில் உள்ளன.

எனவே தான் அந் நாடுகள் பிற நாடுகள் ரசாயன ஆயுத உற்பத்தியில் புதிதாக நுழைவதை தடை செய்கின்றன. அமெரிக்கா தனது வலிமை மூலம் பிறநாடுகளின் ரசாயன ஆயுத உற்பத்தியை தடை செய்யும் ஆற்றல் கொண்ட நாடாகவுள்ளது.

பல கோடி டொலர் செலவில் லிபியா நாடு நிர்மாணித்து வந்த ரசாயன ஆயு...

...ஆயிரக்கணக்கான மக்கள் பலியானார்கள்.

'ஸனரன்' எனப்படும் நச்சு வாயுக் குண்டில் உள்ள 1 லீட்டர் திரவம் சுமார் பத்து லட்சம் மக்களை அழிப்பதற்கு போதுமானது. இந்தப் பயங்கரமான ஸனரன் நச்சுவாயு கொண்ட 900 குண்டுகள் அமெரிக்காவிடம் உள்ளதாக கூறப்படுகின்றது.

அமெரிக்கப் படைகளிடம் பத்து மில்லியன்தொன் இரசாயன ஆயுதங்கள் உள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்த ஆயுதங்களில்30,00,00 ஏவுகணைகளும், ஆயிரக்கணக்கான குண்டுகளும, ஆயிரக்கணக்கான நிலக் கண்ணிகளும் உள்ளனவாம்.

அமெரிக்கப் படைப் பிரிவில் இரசாயன யுத்தத்திற்கான பிரத்தியேக நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும்...

## ஒடுங்கி வரும் சோவியத் நாட்டின் ஏரல்கடல்!

சோவியத் நாட்டில் அமைந்துள்ள உள்நாட்டுக் கடல்களுள் ஒன்றாகிய ஏரல்கடல் உலகின் நாலாவது பெரிய ஏரியாக விளங்கியது. சிறந்த மீன்பிடி இடமாகவும் காணப்பட்டது. ஆனால் இன்று அந்நிலை முற்றாகவே மாறிவிட்டது. ஏரல்கடல் தனது 60 சதவீதமான நீரையும், ஏராளமான மீன்களையும் இழந்து மரணவேதனையால் வாட்டமடைந்து வருகின்றது.

சோவியத் நாட்டின் உஸ்பெக்கிஸ்தானில் உள்ள பருத்தி விளைவிக்கப்படும் நிலங்களுக்கு நீர்ப்பாசன நீர் வழங்குவதற்காக அமுதாரியா, சீர்டாரியா, நதிகள் திசை திருப்பப்பட்டதனால் ஏரல்கடல் வற்றத் தொடங்கியது.

வற்றிச் செல்லும் ஏரல்கடலின் வரண்ட தளத்தினால் வருடந்தோறும் உறிஞ்சப்படும் 75000 தொன் உப்பு புழுதி என்பனவற்றின் ஒரு பகுதி மத்திய ஆசியா முழுவதும் பரவுகின்றது. பருத்தி...

ஏரல்கடல் வற்றிச் செல்வதை கராகல்க் குடியரசு மக்கள் தெய்வத்தின் சோதனை எனக் கூறுகின்றார்களாம். ஏரல்கடல் சுருங்கி வருவதனால் அப்பிரதேசத்தின் மீன்பிடி, விவசாயம், காலநிலை என்பன பெரும்பாதிப்படைந்துள்ளது. ஏரல்கடலின் மரணம் கராகல்பக் குடியரசு பாலைவனமாகிவிடும் என அஞ்சப்படுகின்றது.

ஏரல்கடலைக் காப்பாற்றுவதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கால்வாய்கள் அமைக்கப்பட்டு ஏரல்கடலுக்குள் நீர் பாய்ச்சுவதன் மூலம் இவ் ஏரியை பாதுகாக்க அரசு முனைந்துள்ளது.

ஒரு ஏக்கர் பரப்புள்ள பகுதியை ஒரு அடி ஆழத்துக்கு நீரினால் நிரப்புவதற்கு ஒரு ஏக்கர் அடி நீர் தேவைப்படும். ஏரல்கடலின் ஆழத்தை தற்போது காணப்படும் நிலையில் பேணுவதற்கு வருடத்துக்கு 32 மில்லியன் ஏக்கர் அடி நீர் தேவைப்படும்...

# உலகில் பேசப்படும் மொழிகள்

உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. சில மொழிகள் பேச்சு வழக்கில் மட்டுமே உண்டு. எழுத்து வடிவம் கிடையாது.

சில மொழிகளுக்கு நீண்ட கால வரலாறு உண்டு. நமது தாய்மொழியாகிய தமிழ் மொழி உலகின் மூத்த மொழியாகவும், வரலாற்றுக்கு முற்பட்டதாகவும் ஆராய்ச்சியாளர்களால் கூறப்பட்டுள்ளது. உலகின் சில மொழிகள் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் செப்பனிடப்பட்டு சீராக்கப்பட்டுள்ளன.

இன்று உலகம் முழுவதும் 15 ஆயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. இதில் 3000 முதல் மொழிகளாகவும், 12000 கிளை மொழிகளாகவும் உள்ளன.

ஒரு கோடிக்கு மேற்பட்ட மக்களால் 57 மொழிகள் உலகில் பேசப்படுகின்றன.

உலகில் அதிகளவு மக்களால் பேசப்படும் மாண்டரின் எனப்படும் சீன மொழியாகும். 72.6 கோடி மக்கள் சீன மொழியைப் பேசுகின்றார்கள்.

உலகில் அதிகளவு மக்களினால் பேசப்படும் முதல் பத்து மொழிகளும், பேசுவோர் தொகையும் வருமாறு:-

1. சீனமொழி - 72.6 கோடி 2. ஆங்கில மொழி - 39.7 கோடி 3. ரஷ்ய மொழி – 27.4 கோடி 4. ஸ்பானிய மொழி 25.8 கோடி 5. இந்தி மொழி 25.4 கோடி 6. அராபிய மொழி - 15 5 கோடி 7. வங்காளி மொழி - 15.1 கோடி 8. போர்ச்சுக்கீஸ் மொழி – 15.1 கோடி 9. ஜேர்மன் மொழி - 11.9 கோடி 10. யப்பான் மொழி - 11.9 கோடி.

றன. காற்றை நஞ்சாக்குகின்றது, பயிர் பச்சைகளைக் கூட அழித்து விடுகின்றது.

இரசாயன ஆயுதங்களின் கொடுமையினைப்பற்றி அமெரிக்காவில் இருந்து வெளிவரும் நியூஸ்வீக் சஞ்சிகை பின்வருமாறு கூறுகின்றது 'இரசாயன குண்டு வெடித்ததும் சற்று நேரத்தில் பாதிக்கப்பட்டவரின் வாய், மூக்கு என்பனவற்றிலிருந்து இரத்தம் பீறிடும், அத்தோடு தாங்க முடியாத வேதனை உடலெல்லாம் பரவும், மரண ஓலத்து

ஆயுத உற்பத்தியை தடை செய்யும் ஆற்றல் கொண்ட நாடாகவுள்ளது.

பல கோடி டொலர் செலவில் லிபியா நாடு நிர்மாணித்து வந்த ரசாயன ஆயுதத் தொழிற்சாலை அண்மையில் மர்மமான முறையில் விபத்துக்குள்ளாகி அழிந்தது.

நிலக் கண்ணிகளும் உள்ளனவாம்.

அமெரிக்கப் படைப் பிரிவில் இரசாயன யுத்தத்திற்கான பிரத்தியேக நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. மெர்லாந்தில் அமைந்துள்ள ஆய்வு நிலையத்தில் 1400 நிபுணர்

வருடந்தோறும் உறிஞ்சப்படும் 75000 தொன் உப்பு புழுதி என்பனவற்றின் ஒரு பகுதி மத்திய ஆசியா முழுவதும் பரவுகின்றது. பருத்தி விளைவிக்கப்படும் நிலங்களில் பெருமளவு கிருமிநாசினி, பூச்சி கொல்லி மருந்துகள் பாவிக்கப்படுவதனாலும் ஏரல்கடல் மாசுபடுத்தப்படுகின்றது.

படும். ஏரல்கடலின் ஆழத்தை தற்போது காணப்படும் நிலையில் பேணுவதற்கு வருடத்துக்கு 32 மில்லியன் ஏக்கர் அடி நீர் தேவைப்படும் என மதிப்பிட்டுள்ளார்கள். ஆனால் ஒடுங்கிச் செல்லும் ஏரல்கடலை எதிர்காலத்தில் காப்பாற்ற முடியுமா என்பது சந்தேகத்திற்கு இடமாகவே உள்ளது.

## வாசகர் கவனத்திற்கு!

# 'அ' வந்ததனால் அர்த்தம் மாறியது!

இந்தியாவை ஆண்ட முகலாய அரசர்களில் அக்பர் அசைவ உணவை ஒருபோதும் உண்டது கிடையாது. அக்பர் ஒருவரே அசைவ உணவை உண்ணாத முகலாய அரசர் ஆவார். அக்பர் எப்பொழுதும் சைவஉணவையே விரும்பி உட்கொண்டார்.

ஆனால் 31-05-90 வியாழன் அன்று வெளிவந்த எமது கதம்பமாலைப் பகுதியில் இடம்பெற்ற கத்தரிக்காய் அல்ல நீங்கள்தான் எனக்கு ராஜா' என்ற துணுக்கில் என்றுமே அசைவ உணவு உண்ணும் முகலாய அரசர் அக்பர்... என்ற வார்த்தையில், தவறுதலாக சைவ என்ற சொல்லுக்கு முன்பாக 'அ' என்ற எழுத்து வந்து 'அசைவ' என்ற பதத்தை உருவாக்கி விட்டது. இதனால் சைவ உணவு உண்ட அக்பர், அசைவ உணவு உண்ட அக்பர் என, அர்த்தமே மாறுபட்டுவிட்டது. அச்சுப் பிழையினால் வந்த 'அ' அர்த்தத்தை மாற்றிவிட்டது.

# கதம்பமாலை

—யாழ்ராஜ்—

இரசாயன ஆயுதங்களில் டொக்ஸிக், பைனரி, விஷ வாயு ஆயுதங்கள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள புதுவிதமான இரசாயன ஆயுதங்களாகும்.

வியட்னாம் போரில் அமெரிக்கா குண்டு வீசியதில் லட்சக்கணக்கான வடவியட்னாம் மக்கள் அழிந்தார்கள். பன்மடங்கு வீரியம் ஊட்டப்பட்ட களைகொல்லி மருந்துகளை ஹெலிகொப்டர் மூலம் விசிறியதால் விவசாய நிலங்கள் அழிவடைந்தது 'டொக்ஸீக்' நிலங்களில் தூவப்பட்டமையினால் அவை தட்டாந்தரையாகியது.

இதே போன்று ஈரான் - ஈராக் யுத்தத்தில் அந் நாடுகள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதனால் பல

கள் புதுப்புது இரசாயன ஆயுதங்களைப் பற்றி ஆய்வுகள் நடாத்துகின்றனர்.

அமெரிக்காவுக்கு எவ்வகையிலும் குறைவில்லாது இரசாயன ஆயுதங்கள் சோவியத் ரஷ்யாவிடம் உள்ளன. ஆனால் சோவியத் ரஷ்யாவிடம் 50,000 தொன்னுக்கும் கூடுதலான நச்சுப் பொருள் சம்பந்தப்பட்ட இரசாயன ஆயுதங்கள் இல்லையென சோவியத் வெளிநாட்டு அமைச்சு கூறியுள்ளது உண்மையில் அமெரிக்காவிடம் உள்ள இரசாயன ஆயுதங்களின் அளவுக்கு ஏறக்குறைய சமமான அளவு இரசாயன ஆயுதங்கள் சோவியத் ரஷ்யாவிடம் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

சோவியத் நாட்டின் இரசாயன ஆயுதங்கள் யாவும் அந் நாட்டிலேயே உள்ளன. ஆனால் அமெரிக்காவின் இரசாயன ஆயுதங்கள் மேற்கு ஜேர்மனியிலும் வைக்கப்பட்டுள்ளாதாம். இவை முழு ஐரோப்பாவையும் அழித்து விட போதுமானதாம்.

இரசாயன ஆயுதங்களை முழுமையாகவும் உலகளாவிய ரீதியிலும் தடை செய்தல், ஒழித்தல் பற்றி இரு வல்லரசுகளும் பேச்சுவார்த்தைகள் நடாத்தி வந்தன.

சர்வதேச ரீதியிலான பல தரப்பு ஒப்பந்தங்கள் மூலம் உலகில் உள்ள இரசாயன ஆயுதங்களை முற்றாக அழித்துவிட அமெரிக்கா முன் வந்தது. பல தரப்பு ஒப்பந்தத்திற்கு காத்திராமல் இரு தரப்பு ஒப்பந்தம்மூலம் இதை நிறைவேற்ற சோவியத் யூனியன் விரும்பியது.

# பகலில் இல்லாத பணம், இரவில் எப்படி வரும்?

பிரான்ஸ் நாட்டில் போல்ஷுக் என்ற பிரபல நாவலாசிரியர் ஒருவர் இருந்தார். ஒருநாள் இரவு அவருக்குத் தூக்கமே வரவில்லை. தூக்கம் வராததால் கட்டிலில் மாறி மாறி புரண்டு கொண்டிருந்தார். அன்றிரவு அந்த அறைக்குள் பக்காத் திருடன் ஒருவன் நுழைந்து, அவர் மேசையினை நன்கு துழாவி பணம் இருக்கின்றதா? எனத் தேடிக்கொண்டிருந்தான். இதை அவதானித்த போல்ஷுக் படுக்கையில் இருந்தவாறு கள்வனைப் பார்த்து ஆஹா! என்று சப்தமிட்டு சிரித்தார். சிரிப்பொலி கேட்டு முதலில் திடுக்கிட்ட கள்வன், போல்ஷுக்கைப் பார்த்து ''ஏன் சிரிக்கின்றாய்?'' என ஆத்திரத்துடன் கேட்டான். அதற்கு போல்ஷுக் ''நான் பட்டப் பகலில் எனது மேசையில் காணமுடியாத பணத்தை இரவில் கண்டுவிடலாம் என எண்ணி இவ்வளவு சிரமப்படுகின்றாயே, அதை நினைத்துத்தான் சிரித்தேன்'' என பரிதாபமாக கூறியதும், கள்வனுடைய முகத்தில் அசடு வடிந்ததாம்.

# நீதிபதியின் கர்வத்தை அடக்கிய கைதி!

18 ஆம் நூற்றாண்டில். ஜெபரிஸ் என்பவர் இங்கிலாந்தின் தலைமை நீதிபதியாக இருந்தார். இவர் அகங்காரமும், ஆணவமும் பிடித்தவர். தற்பெருமையில் மூழ்கிக் கிடந்தவர். கடுமையான தண்டணை வழங்குவதில் கை தேர்ந்தவர். குற்றவாளிகளுக்கு அவர் சிம்மசொப்பனமாக விளங்கினார்.

ஒரு நாள் நீதி மன்றத்தில் வழக்கு விசாரணையின் போது குற்ற வாளியாக நின்ற சந்தேக நபரை அவர் தம் பிரம்பால் சுட்டிக்காட்டி ''இதோ என்னுடைய பிரம்பின் ஒரு முனையில் ஒரு போக்கிரிஇருக்கிறான்''. எனக் கூறினார் உடனே அக்கைதி ''பிரபு! அந்தப் போக்கிரி உங்கள் பிரம்பின் எந்த முனையில் உள்ளான்? எனக் கேட்டு விட்டான். அகம் பாவம் பிடித்த நீதிபதிக்கு வெட்கத்தினால் தலை சுற்றத் தொடங்கியதாம்.

இந்த நீதிபதியின் வாழ் நாளில் அன்று தான் அவரது கர்வம் அடங்கியதாம்.

சட்டம் என்ற இருட்டறையில் வக்கீலின் வாதம் ஒளி விளக்கு ஆனால் அந்த வெளிச்சத்தை ஏழைகளினால் ஒரு போதும் பெற முடியாது என அறிஞர் அண்ணாகூறிய அறிவு மொழி எமது கண்களைத் திறக்குமா!

## அறிஞர் அண்ணா சொன்ன குட்டிக்கதை

# அவள் முகவரியை என்னிடம் கொடு

இரண்டு பெண்கள் ஒருஇளைஞனை காதலித்தார்கள். அவர்களில் ஒருத்திஏழை; ஏழையானாலும் அழகு குடிகொண்டிருந்தது, மற்றப்பெண் செல்வச் செழிப்பு உள்ளவள். இவர்களில் தான் யாரை திருமணம் செய்து குடித்தனம் நடத்தலாம். என்றுஅந்த வாலிபன் தன் நண்பனிடம் யோசனை கேட்டான். அதற்கு அந்தநண்பன், ''ஏழையாகஇருந்தாலும் பரவாயில்லை; அந்தப் பெண்ணையே மணந்து கொள்! அவள் தான் உனக்கு வாழ்க்கையில் உறுதுணையாக இருப்பாள் மேலும் அவளோ அழகிஎன்றும் கூறுகின்றாய்; எனவேஅந்த ஏழைப் பெண் தான்உனக்கு ஏற்றவள்'' என்று கூறிவிட்டு, ''அந்தப் பணக்காரப் பெண்ணின் முகவரியை என்னிடம் கொடு என்றானாம்.

குறிப்பு:-

''நமக்கு நாமே சொல்ல முடியாத<br>ஒன்றை எவனால்சொல்லமுடிகிறதோ,<br>அவனே நமக்கு விலைமதிப்பற்ற<br>நண்பன் ஆவான்''—எமர்சன்

இக்கதையில்வந்தநண்பன்?

# முகத்தின்தாடியில்தேனீக்களை வளர்த்த மனிதர்கள்!

இங்கிலாந்தைச் சேர்ந்த ஹெனவார் டேவிஸ் என்பவர் சுமார்20,000 தேனீக்களை தமதுதாடியில் வளர்த்து உலக சாதனை ஒன்றை உருவாக்கியுள்ளார். இச்சாதனை 1952 ஆம் ஆண்டு மே மாதம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இவருக்குப் பின்னர் கூங் என்பவர் தான் வளர்த்த 17.5 அங்குல நீளமுடைய தாடியில் சுமார் 17,500 தேனீக்களை வளர்த்துள்ளார். இவர் 1979ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் அதிர்ச்சியூட்டும் பல தகவல்களைக் கூறினார். இவ்வாறு ஏற்கனவே 91 முறை தேனீக்களை தமது தாடியில் வளர்த்துள்ளதாகவும், அத்தேனீக்கள் அங்குமிங்கும் பறந்த பிறகு தனது தாடியில் வந்து தங்கும் எனவும், தான் உணவு உட்கொள்வதற்கு மட்டுமே சிறிது சிரமப்பட்டதாயும் கூறினார். தனது சாதனைக்கு முன் இவை எல்லாம் சிறிய விடயங்கள் எனக் கூறிய அவர் ஓர் அதிசயப்பிறவியாகவே நமக்கு முன் காணப்படுகின்றார்.

## வேலணை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல் - 1990

வேலணை பிரதேச சபையின் வேலணை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, நயினாதீவு, மண்டைதீவு உப அலுவலங்களின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 1990 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையும் குத்தகைக்கு கொடுப்பதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 21-06-1990 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வேலணை பிரதேச சபை விசேட ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப் பத்திரங்களை மேற்படி உப அலுவலகங்களில் 04-06-1990 ஆம் திகதியிலிருந்து 18-06-1990 ஆம் திகதி வரை கீழ்க்காணும் விபரப்படி உரிய பெறுமதியைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மூலப்பிரதி வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகத்திற்கும், இணைப்பிரதி யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கும் 21-06-1990 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### 1990 ஆண்டு குத்தகைக்குரிய அட்டவணை

### அட்டவணை I

| விபரம் | ஏற்றுக்கொள்ளப் படக் கூடிய தொகை | கேள்வி வைப்பு பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. வேலணை துறையூர் மீன் சந்தை | ரூபா 5000/- | ரூபா 100/- | ரூபா 25/- |
| 2. வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | ,, 5000/- | ,, 100/- | ,, 25/- |
| 3. வேலணை மேற்கு அம்பிகை நகர் (கெட்டில்) மீன் சந்தை | ,, 3000/- | ,, 100/- | ,, 25/- |
| 4. சரவணை மீன் சந்தை | ,, 2000/- | ,, 100/- | ,, 25/- |
| 5. நயினாதீவு மரக்கறிச் சந்தை | ,, 2000/- | ,, 100/- | ,, 25/- |
| 5. நயினாதீவு மீன் சந்தை | ,, 2000/- | ,, 100/- | ,, 25/- |

### அட்டவணை II

| விபரம் | | | |
|---|---|---|---|
| 1. வேலணை மாட்டிறைச்சிச் கடை | ரூபா 10000/- | ரூபா 100/- | ரூபா 25/- |
| 2. புளியங்கூடல் மாட்டிறைச்சிக் கடை | ,, 5000/- | ,, 100/- | ,, 25/- |
| 3. புங்குடுதீவு மாட்டிறைச்சிக்கடை | ,, 10000/- | ,, 100/- | ,, 25/- |
| 4. அல்லைப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | ,, 5000/- | ,, 100/- | ,, 25/- |
| 5. மண்டைதீவு மாட்டிறைச்சிக்கடை | ,, 10000/- | ,, 100/- | ,, 25/- |
| 6. நயினாதீவு மாட்டிறைச்சிக்கடை | ,, 2000/- | ,, 100/- | ,, 25/- |
| 7. வேலணை ஆட்டிறைச்சிக்கடை | ,, 5000/- | ,, 100/- | ,, 25/- |
| 8. புங்குடுதீவு ஆட்டிறைச்சிக்கடை | ,, 5000/- | ,, 100/- | ,, 25/- |
| 9. அல்லைப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | ,, 3000/- | ,, 100/- | ,, 25/- |
| 10. மண்டைதீவு ஆட்டிறைச்சிக்கடை | ,, 3000/- | ,, 100/- | ,, 25/- |
| 11. நயினாதீவு ஆட்டிறைச்சிக்கடை | ,, 2000/- | ,, 100/ | ,, 25/- |

வே. கந்தசாமி
விசேட ஆணையாளர்
வேலணை பிரதேச சபை.

(B/ I164)

## மாகாணசபை மட்டத்தில் ஆசிரிய இடமாற்றம்

(கொழும்பு)

மாகாண சபை கல்வி அலுவலக மட்டத்தில் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான நிர்வாகக் குழுக்கள் அமைக்கப்படும் என்று கல்விச் சேவைகள் ஆணைக் குழுத் தலைவர் ஜோர்ஜ் மென்டிஸ் தெரிவித்தார்.

இவர் இதனை சகல மாகாண சபை கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரையை அனுப்பியிருக்கிறர்.

இதனால் இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகளும் மாகாணசபை மட்டத்திலேயே கோரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சகல மாகாணசபைகளிலும் மூவரைக் கொண்ட நிர்வாகக் குழு அமைக்குமாறும், இவ் நிர்வாகக் குழுவேமேன் முறையீடுகளை பரிசீலனை செய்யும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன் இவ் நிர்வாகக் குழுவில் சிரேஷ்ட அதிபர் ஒருவரையும் நியமிக்குமாறும் தான் பணித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

## கிரிக்கட் போட்டி

(வடமராட்சி)

யாழ்மாவட்டப் பாடசாலைகளுக்கான கிறிக்கட் சங்கம் நடாத்தும் கிரிக்கட் போட்டி 17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையே இம் மாதம் 16-6-90 சனிக்கிழமை பருத்தித்துறை ஹாலிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இப்போட்டியில் முதன் முதலாக தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் பருத்தித்துறை ஹட்லிக் கல்லூரியும் மோதுசின்றன.

## உதைபந்தாட்டப் போட்டி

(ாாழ், விளையாட்டு நிருபர்)

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதிற்குட்பட்டவர்களுக்ரான உதைபந்தாட்டப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்ற் ஜேம்ஸ் வித்தியாலயம் கோஷ்டியும், யாழ். பரியோவான் கல்லூரிக் கோஷ்டியும், கலந்துகொண்டன, பரியோவான் கல்லூரிக்கோஷ்டி 2-0 கோல்களால் வெற்றியீட்டியது. (42)

## பதிவுத்தகவல்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பதிவாளர் அலுவலகத்தில் கடந்தவருடம் 10533 பிறப்புகள், 2785இறப்புகள், 47 சிசு மரணங்கள்பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட பதிவாளர் திரு.எஸ் முத்துக்குமாரன்கூறினார்.

686 இறப்பு விசாரனைகளும், 470 பிறப்பு விசாரனைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

3424 பொது திருமணபதிவுகளும், 110முஸ்லிம் விவாகப் பதிவுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (37)

## நெடுந்தீவில் உதைபந்தாட்டப் போட்டி

(யாழ். வியைாட்டு நிருபர்)

குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகத்துக்கும் நெடுந்தீவு சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நெடுந்தீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகம் 3-2 என்ற கோல் கணக்கில் நெடுந்தீவு சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்துள்ளது.

குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகத்துக்கு பிரஞ்சனும் நெடுந்தீவு சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு எஸ். கென்னடியும் தலைமை தாங்கினார்கள். (42)

## மாவட்ட லீக்களுக்கிடையில் உதைபந்தாட்டப் போட்டி

(யாழ் விளையாட்டுநிருபர்)

ஸ்ரீலங்கா உதை பந்தாட்ட சம்மேளனம் மாவட்ட லீக்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதற்கட்டமாக எதிர்வரும் யூன் 16- ஆம் திகதி யாழ் மாவட்டக் கோஷ்டிக்கும் பருத்தித்துறை மாவட்டக் கோஷ்டிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி யாழ்நகரில் நடத்தவுள்ளது.

இரண்டாவது கட்டப் போட்டி நெல்லியடியில் இடம் பெறும் என்று யாழ் உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் திரு.கே.குமரையா தெரிவித்தார். (42

## யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம் 35 ஏக்கரில்

(கிளிநொச்சி)

யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் 35 ஏக்கர் காணியில் அமைந்துள்ளது, விவசாய பீடக் காணி கிளிநொச்சி 155ம் கட்டையில் அமைந்துள்ளது விவசாய பீடம் அமைவதற்கான சட்டிடவேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

யாழ். பல்கலைக் கழகபதிவாளர் திரு.க- பரமேஸ்வரன் மேற்படி கட்டிட வேலையைப் பார்வையிடுவதற்காகவும், இரத்தின புரத்தில் உள்ள 25 ஏக்கர் காணியை (விடுதிக் காணியை) பொறுப்பேற்பதற்காகவும் கடந்த திங்கட்கிழமை ளிநொச்சிக்கு விஜயம் செய்தார்.

இரத்தினபுரத்தில் வசித்து வந்த மக்களை வெளியேற்றி மேற்படி காணி 25 ஏக்கரையும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசசர் மேலதிக அரசாங்க அதிபர் காணி அதிகாரி திரு. க. குணராசா ஆகியோர் யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரனிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்தனர்.

மேற்படி காணியில் விவசாய பீட விடுதிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

இழுபறியில் இருந்து வந்த இக் காணிப் பிரச்சினைசுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டதற்கு உதவிய சகலருக்கும் அவர் நன்றி தெரிவித்தார். (49)


## பனந் தும்புத் தூரிகைகள்

பனந்தும்பினால் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு தேவைகளுக்குமான தூரிகைகள் பனை அபிவிருத்திச் சபையின் சகல கற்பகம் விற்பனை நிலையங்களின் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன.

பனந்துப்புத் தூரிகைகளைப் பாவிப்பதன் மூலம் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவியுங்கள்.

தலைவர்,
ப. அ. சபை
B-1162

உங்கள் சகல வாகனங்களின்
மோட்டார் உதிரிப் பாகங்கள்...

சகலவித
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக
விற்பனையாளர்கள்....

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10. மண்டைதீவு ஆட்டிறைச்சிக்கடை | ,, | 3000/- | ,, | 100/- | ,, | 25/- |
| 11. நயினாதீவு ஆட்டிறைச்சிக்கடை | ,, | 2000/- | ,, | 100/ | ,, | 25/- |

வே. கந்தசாமி
விசேட ஆணையாளர்
வேலணை பிரதேச சபை.

(B/ 1164)

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதிற்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்ற் ஜேம்ஸ் வித்தியாலயம் கோஷ்டியும், யாழ். பரியோவான் கல்லூரிக் கோஷ்டியும், கலந்துகொண்டன, பரியோவான் கல்லூரிக்கோஷ்டி 2-0 கோல்களால் வெற்றியீட்டியது. (42)

நெடுந்தீவு சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்தை தோற்சடிந்துள்ளது.

குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகத்துக்கு பிரஞ்சனும் நெடுந்தீவு சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு எஸ். கென்னடியும் தலைமை தாங்கினார்கள். (42)

விற்பனை நிலையங்களின் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன.

பனந்துப்புத் தூரிகைகளைப் பாவிப்பதன் மூலம் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவியுங்கள்.

தலைவர்,
ப. அ. சபை
B-1162


உங்கள் சகல வாகனங்களின்

**மோட்டார் உதிரிப் பாகங்கள்...**

**சகலவிதமான ரயர் - ரியூப் வகைகள்...**

அனைத்தும்
சகாய விலையில்
பெற்றுக்கொள்ள..

**முருகன்**
**மோட்டோர் ஸ்ரோர்ஸ்**
8/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B-986)



சகலவித
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக
விற்பனையாளர்கள்....

**லூசிலி** நீரிறைக்கும் இயந்திர
உதிரிப்பாக
விற்பனையாளர்கள்

**றோயல் மோட்டோர்ஸ்**
182, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Telephone: 23790 T' Grams: ROYALSONS
(B.985)



உங்கள் வாகனங்கள் அனைத்தின் உறுதிமிக்க தொழில்களுக்கு .....
எங்கள் சேவைகள்....

திறமைமிக்க தொழில்நுட்பவியலாளர்களின் ஆலோசனை

உத்தரவாதமுள்ள
மெக்கானிக்கல் வேலைகள்

உறுதியான
ஒட்டு வேலைகள்

ஒழுங்கமைப்பான
வயறிங் வேலைகள்

திறமையான
ரிங்கர் வேலைகள்

உடனுக்குடன்
சிறு வேலைகளனைத்துக்கும்

நாடவேண்டிய இடம்

**வேனுகா டீசல் மோட்டோர் வேக்ஸ்**
61, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(B-987)

### சிந்தனைக்கு

மற்றவர் அனுபவத்தை எவரும் பயன்படுத்துவதில்லை
சொந்த அனுபவம் ஒருவருக்கு கிட்டும் போது
அதைப் பயன் படுத்துவதற்குள் காலம்
கடந்து விடுகின்றது.

- நத்தேனியஸ் ஹாத்தார்ன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 14-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## இரண்டு முக்கிய அம்சங்கள்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் கடந்த சில தினங்களில் நடந்த சில துர்ப்பாக்கியமான, கவலைக்குரிய சம்பவங்கள் இரண்டு முக்கிய விஷயங்களில் உடன்நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

1. தமிழ்ப்பகுதிகளிலிருந்து சிங்களப் பொலிசாரை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும், தமிழ்ப் பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களை உடன் மூடிவிட வேண்டும்.

2. தமிழ்ப் பகுதிகளில் நிலவும் அரசியல் சூன்ய நிலையை நீக்கி தேசிய ஜனநாயக நீரோட்டத்தில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வதற்கு இனியும் காலம் தாழ்த்தாது வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைத்துப் பொதுத்தேர்தல் நடத்துவது; அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவது.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் தேதி சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து காலிமுகத்திடலில் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் அமைதியாகச் சத்தியாக்கிரகம் செய்தபோது சிங்களக் காடையர்கள் காட்டுமிராண்டித்தனமாக அவர்களைத் தாக்கியபோது பொலிசார் கைகட்டிப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

அப்பொழுது ஆரம்பமான இந்தப் பொலிஸ் மனப்பான்மை துவேஷமாக வளர்ந்து 1977 ஆம் ஆண்டில் நாட்டில் பெரும் இனக்கலவரத்தைப் பொலிசாரே திட்டமிட்டு உருவாக்கினர். பின்னர் தமிழ்ப் பகுதிகளில் என்ன சம்பவங்கள் நடந்தாலும் அவர்கள் கைபடாதிருந்ததில்லை.

அரசியல்வாதிகள் 1956 ஆம் ஆண்டில் கட்டுப்பாடான பொலிஸ்படைக்குள் புகுத்திவிட்ட விஷவித்து இன்று வளர்ந்து பெரும் விருட்சமாகி விட்டது. இதைத் தறித்தாக வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் சிங்களப் பொலிசார் இருக்கும்வரை பிரச்சினை தோன்றி வளருமேயொழிய தீரமாட்டாது.

சிறிலங்கா சிங்கள இராணுவம் இந்தியாவிலிருந்து இங்கு கள்ளமாகக் குடியேறுவதைத் தடுப்பதற்காகவே பலாலியில்முதலில்முகாமிடப்பட்டது. திருக்கோணமலையில் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களவரைப் பாதுகாக்கவும் மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் சிங்களக் குடியேற்றவாசிகளைப் பாதுகாக்கவும் இராணுவம் முகாமிடப்பட்டன.

# மேஜர் எர்ணஸ்டோ சே. குவேரா

இக்கட்டுரை போலிப் புரட்சிவாதிகளைப் பற்றியதோ, பகல்வேடதாரிகளைப் பற்றியதோ அல்ல. ஏகாதிபத்தியவாதிகளால் அடக்கப்படும், சுரண்டப்படும் மக்களால் என்றென்றும் போற்றப்படும் உன்னதமான, நேர்மையான புரட்சிகர வீரனைப் பற்றியது. அவர்தான் ஆர்ஜென்டீனா பெற்றெடுத்த புரட்சியின் மைந்தன். ஒரு இளம் மருத்துவன். பொலிவியாவின் மலை இடுக்குகளில் காவியமாகிவிட்ட சரித்திர நாயகன், கெரில்லா மேஜர் எர்ணஸ்டோ சே. குவேரா.

பொலிவியாவின் மலை இடுக்குகளில் சங்கமமாகிவிட்ட இப்புரட்சியின் மைந்தன் 1928ஆம் ஆண்டு யூன் மாதம் 14ஆம் நாள் பிறந்தார். ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இவர்களின் அடிவருடிகளுக்கும் எதிராக சோஷலிஷம் எனும் கொடியை உயர்த்திப் பிடிப்பான் என்றோ, ஏழ்மையில் உழலும் பல கோடி இலத்தீன் அமெரிக்க மக்களின் துயர் துடைக்கப் புறப்படுவான் என்றோ அன்று யாரும் எண்ணியிருக்க முடியாது. ஏனெனில் அவர் தனது 2ஆவது வயதிலேயே ஆஸ்துமா நோய்க்கு உள்ளானவர். பின்னாளில் கியூபாவில் போராடும் போதும், பொலிவியாவின் மலை இடுக்குகளில் எதிரிகளால் தேடப்பட்ட போதும் ஆஸ்த்துமா இவரைக் கஷ்டப்படுத்தியது. ஆனால் நோய் இவரையோ, இவரது புரட்சிகர நடவடிக்கைகளையோ பலவீனப்படுத்தவில்லை. ஏனெனில் நெஞ்சுரம்கொண்ட கெரில்லா வீரர் அவர்.

இவர் தனது இளமைக் காலத்தில் அமெரிக்கக் கண்டம் முழுவதையும் நன்கு அறிந்து வைத்திருந்தார். தனது பயணங்களின்போது அமெரிக்க கண்ட நாடுகளில் அரசியல் நிலவரங்கள், கால நிலை, தரைத் தோற்ற அமைப்பு, என்பவற்றை நன்கு அறிந்து வைத்திருந்தார். தனது இளமைக்காலம் பற்றி

கண்டு குவேரா குவாதிமாலாவை விட்டுப் புறப்பட்டார்.

சிறந்ததொரு அரசியல் முதிர்ச்சியோடு தனது இளம் நரம்புகளில் இரத்தம் பாய்ந்து கொண்டு இருக்கின்ற வரையில் சாத்தியம் அற்றவற்றைக்கூட சாதித்து விடலாம் என்ற நம்பிக்கையில் மெக்சிக்கோ சென்றார்.

மெச்சிக்கோவிலே குவேரா தனக்கு கருத்து ஒருமித்த நண்பர்களைத் தேடிக் கொண்டு இருந்தார். அத்திலாந்துச் சமுத்திரத்தில் இன்று சோசலிஷத்தில் உறுதியாக இருக்கும் நாட்டின் அன்றைய புரட்சிவாதியும் இன்றைய கியூபாவின் ஜனாதிபதியுமான பிடல்காஸ்ட்ரோவை 1955-ம் ஆண்டு ஜூலை 9 ஆம் நாள் மெச்சிக்கோவிலே ஒரு குளிர் மிகுந்த இரவில் சந்தித்தார். இருவரும் சர்வதேசப் பிரச்சினைகள் குறித்து உரையாடினர். காஸ்ட்ரோ தனது வருங்காலத் திட்டங்களைக் கூறி ''கிரான்மா'' பயணத்தில் (புரட்சிக் குழு பயணம் செய்த கப்பலின் பெயர்) மருத்துவராக குவேராவை ஏற்பதாகக் கூறினார். கியூபாவில் நடைபெற இருக்கின்ற போராட்டத்திற்கான தயாரிப்பு வேலைகள் பிடலின் தலைமையில் நடைபெற்றுக் காண்டு இருந்தது.

### கிரான்மாப் பயணம்

1956 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் திகதி விடிகாலை 2 மணிக்கு கியூபாவின் 85 பேரைக் கொண்ட புரட்சிக் குழு கிரான்மாப் பயணத்தை மேற்கொண்டது. இக் காலகட்டத்தில் கியூபாவை ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளில் ஒருவனான பாடிஸ்டா ஆட்சி செய்துவந்தான். கிரான்மா கியூபாக் கரையைத் தொட்டதும் பாடிஸ்டாவின் விமானப்படை கடுமையான குண்டுத்தாக்குதலை மேற்கொண்டது. இதில் தப்பியோடியவர்கள் இறந்தவர்கள் தவிர 15 பேர் மீதமிருந்தனர். குவேராவிற்கு இது

இன்று எர்ணஸ்டோ சேகுவேராவின் பிறந்த தினம். விடுதலைக்காக போராடும் மக்களிடையே காவியமாகிவிட்ட 'சேகுவேரா'வின் ஞாபகார்த்தமாக இக்கட்டுரையை பிரசுரிக்கின்றோம்.

ஆம்! குவேரா உண்மையில் தூய்மையான புரட்சிவீரன் இப்பேச்சே இவர் வெளிநாடு ஒன்றில் பேசிய கடைசிப் பேச்சாக அமைந்தது. இதன் பின் இந்த வேங்கை முடங்கிக் கிடக்கவில்லை. தனக்குவழங்கப்பெற்ற கியூபாக் குடியுரிமை, பதவிகள் என்பவற்றை முறைப்படி இராஜினாமச் செய்து ''எனது எளிய முயற்சிகள் தேவைப்படுகின்றதேசங்களை நோக்கி'' என்றுகூறிச் சென்றார். பின்னாளில் ஒரு கடிதம் குவேராவிடம் இருந்து பிடல் காஸ்ட்ரோவிற்கு வந்தது அது வருமாறு.

### புதிய யுத்தகளம் நோக்கிச் சேகுவேரா

ஹவானா (விவசாயஆண்டு)
பிடல்!

மாரியா ஆண்டோனியாவின் இல்லத்தில் நாம் முதன், முதலாகச் சந்தித்த நிகழ்ச்சியை நான் நினைத்துப் பார்க்கின்றேன். அப்போது நாங்கள் எவ்வாறு நமது கியூப பயணத்திட்டத்தை முன்வைத்தீர்கள் என்பதும் பற்றியும் நமது அவசரமான தயாரிப்புகள்பற்றியும் நினைத்துப் பார்க்கின்றேன்.

''இறந்து போனால் யாரிடம் தெரிவிப்பது என்பது பற்றிக் கேட்ட போது தான்நான் மேற்கொண்டுள்ள பணியில் இறந்து போகவும் வாய்ப்புள்ளது என்ற உண்மையால் திகைப்பிற்குள்ளானோம் ஒரு உண்மையான புரட்சியில் வெற்றியும் கிட்டலாம் அல்லதுஇறப்பும் நேரலாம் என்ற உண்மையைப் பின்னர் அறிந்து கொண்டோம். வெற்றியின் பாதையில் இரு புறத்திலும் பலர் புதைககப்பட்டார்கள்.

''இன்றைய நிகழ்ச்சிகள் ஆரவாரம் இல்லாமல் நடப்பது போல் தோன்றுகிறது. ஏனெனில் நாமனைவரும் பக்குவப்படுத்தப்பட்டு விட்டோம் ஆனால் நிலைமை அதேமாதிரிபாரகத்தான் இருக்கிறது; கியூபத்தீவில் புரட்சியோடு என்னை இணைத்து கடமையின் ஒரு பகுதியைத் தான் நான் நிறைவேற்றியிருப்பதாக உணர்கின்றேன். ஆகவே நான் உங்களைவிட்டு எனது தோழர்களை விட்டு எனது சொந்த மக்களாக மாறி விட்ட கியூப மக்களை விட்டு பிரிகிறேன்.

''கட்சித் தலைமை, மந்திரி பதவி, மேஜர்பொறுப்பு ஆகியவற்றை நான் முறைப்படி

டணிகள் தேவைப்படுகின்றன. கியூபாவின் ஆட்சிப் பொறுப்பில் தாங்கள் இருப்பதனால் தாங்கள் ஆற்ற முடியாத கடமைகளை நான் ஆற்ற முடியும்; ஆகவே அந்தப் பணியில் நான் ஈடுபட நேரம் வந்து விட்டது.

நான் ஒரே நேரத்தில் மகிழவும், துக்கப்படவும் செய்கிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். ஒரு கட்டுமானச் சிற்பியின் ஒளி மயமான நம்பிக்கைகளை விட்டு விட்டு நான் புறப்படுகிறேன். இது என்னை வேதனைப் படுத்துகிறது. நீங்கள் என்னுள் ஊன்றிய நம்பிக்கை விதையையும், எனது புரட்சிகர மக்களின் ஆன்மாவையும் நான் என்னோடு புதிய யுத்த களத்தில் இறங்குகிறேன் மிகப் புனிதமான கடமையை ஆற்றப் போகின்ற உணர்வோடு எங்கெல்லாம் ஏகாதிபத்தியம் இருக்கிறதோ அங்கெல்லாம் அதை எதிர்த்துப் போரிடும் புனிதப் பணியில் இறக்குகிறேன் என்ற உணர்வோடு நான் புதிய யுத்தகளம் நோக்கிப் புறப்படுகிறேன். இந்த உணர்வு என் உறுதியை அதிகரிக்கிறது. இந்த உணர்வு என்னுள் மூண்ட வேதனையைப் பலமடங்கு குறைக்கின்றது.

மற்றவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழவேண்டும் என்ற உணர்வோடு எல்லாப் பொறுப்புக்களையும் தந்து விட்டு நான் கியூபாவை விட்டுக் கிளம்புகிறேன் என்று

புரட்சிக்காரர்கள் நோயின் காரணமாகவோ, அங்கவீனத்தின் காரணமாகவோ அல்லது சில்வகை உணர்ச்சிஈடுபாடுகளின்காரணமாகவோ உருவாகுவதில்லை. மாறாக அவர்கள் ஒரு சுரண்டும் அமைப்பின்காரணத்தாலும்நீதிக்காகப் போராடும் மனிதனின் இயல்பான உந்துதலின் காரணமாகவும் உருப்பெறுகிறார்கள்,

மீண்டும் கூறுகிறேன் நான் தொலை தூரத்தில் இருக்கின்றபோது எனது இறுதி நேரங்கள் கணக்கிடப்படுமானால் எனது கடைசி நினைவுகள் கியூபாவின் மக்களைப் பற்றியதாகவும், குறிப்பாகத் தங்களைப்பற்றியதாகவும் இருக்கும். நீங்கள் எனக்குக் கற்றுக்கொடுத்த விஷயங்களுக்காகவும் எனக்கொரு உதாரண புருஷராகத் திகழ்ந்ததற்காகவும் நன்றி கூறுகிறேன். இறுதிவரை உங்+ளு

கடிதத்தைப் படித்தபின் பிடல் காஸ்ட்ரோ கூறினார்.

ஆம்!போராளிகள் மனிதாபிமானம் உடையவர்களே!

1966ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எர்ணஸ்டோ சேகுவேரா இலத்தீன் அமெரிக்காவில் இருந்த பொலிவியாவிற்கு சென்று புரட்சிக் குழுவிற்கு தலைமை ஏற்று தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டார். புரட்சியை ஆரம்பித்து 11 மாத காலமே உயிர் வாழ்ந்தார். இக்காலப் பகுதியிலேதான் உலகப் புகழ்

**சாரங்கன்**

பெற்ற ''பொலிவியன் டையரியை'' (தினக்குறிப்பு) எழுதினார். 1966ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் நாள் பேசத்தொடங்கும் இந்த டையரி 1967ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் நாளோடுதனதுபேச்சை முடிக்கிறது.

### இறுதி நாட்கள்

1967ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் நாள் தனது 39வயதில் கெரில்லா மேஜர் எர்ணஸ்டோ சேகுவேரா பொலிவியாவின் மலை இடுக்குகளில் ஒரு சண்டையில் காயப்படுத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டார். பின்னர் ஒரு பாடசாலையில் அதாவது 'குயூபிரடா டெல்யூரோ' எனும் இடத்தில் வைத்து அவர் எவர்களைத் தனது விரோதிசளாகக் கருதினாரோ, எதெற்கெதிராகப் போராடினாரோ அந்த வடபுலத்து ஏகாதிபத்தியத்தின் கூலிப்படை அதிகாரிகள் முன்னிலையில் இராணுவக் கொடுங்கோலர்களால் பல தடவை சுடப்பட்டு கொல்லப் பட்டார்.

இறந்தும் சூடுஅடங்காத அவர் உடல் இனம்தெரியாத இடத்தில் புதைக்கப்பட்டது. அச் சந்தர்ப்பத்தில்தான் தாங்கள் கொலை செய்தது சேகுவேராவையா என்பதனை உறுதிசெய்ய அவரின் இரு கை

மனப்பான்மை துவேஷமாக வளர்ந்து 1977 ஆம் ஆண்டில் நாட்டில் பெரும் இனக்கலவரத்தைப் பொலிசாரே திட்டமிட்டு உருவாக்கினர். பின்னர் தமிழ்ப் பகுதிகளில் என்ன சம்பவங்கள் நடந்தாலும் அவர்கள் கைபடாதிருந்ததில்லை.

அரசியல்வாதிகள் 1956 ஆம் ஆண்டில் கட்டுப்பாடான பொலிஸ்படைக்குள் புகுத்திவிட்ட விஷவித்து இன்று வளர்ந்து பெரும் விருட்சமாகி விட்டது. இதைத் தறித்தாக வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் சிங்களப் பொலிசார் இருக்கும்வரை பிரச்சினை தோன்றி வளருமேயொழிய தீரமாட்டாது.

சிறிலங்கா சிங்கள இராணுவம் இந்தியாவிலிருந்து இங்கு கள்ளமாகக் குடியேறுவதைத் தடுப்பதற்காகவே பலாலியில்முதலில்முகாமிடப்பட்டது. திருக்கோணமலையில் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களவரைப் பாதுகாக்கவும் மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் சிங்களக் குடியேற்றவாசிகளைப் பாதுகாக்கவும் இராணுவம் முகாமிடப்பட்டன.

சிங்களக் குடியேற்றவாசிகளும் பொலிசாரும் காலத்துக்குக்காலம் இனக்கலவரங்களைத் தூண்டிவிட்ட போதெல்லாம் தமிழர்களை அவர்களது சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றுவதற்கு இராணுவம் காரணமாக இருந்தது.

தமிழ் இளைஞர்கள் சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைகளை எதிர்த்து ஆயுதம் ஏந்தியதும் ''பயங்கரவாத ஒழிப்பு'' என்ற போர்வையில் தமிழ்ப் பகுதிகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. லலித் அத்துலத்முதலி சிங்கள இளைஞர்களுக்கு அவசரக் கோலத்தில் மூன்றுமாதப் பயிற்சியளித்து தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பி வைத்தார். அதன் விளைவையும் அவரே அனுபவித்தார்.

இன்றும் பாதுகாப்புக்கெனத் தமிழ்ப்பகுதிகளிலுள்ள சிறிலங்கா இராணுவம் மக்களையும் பாதுகாக்க முடியாமல் தங்களையும் பாதுகாக்க முடியாமல் குழப்பத்தை ஏற்படுத்தி நாட்டில் இரத்தக்களரியை உருவாக்க துடிக்கிறது.

இந்நிலையில் நாட்டில் நிலவும் அமைதியையும் சாந்தியையும் கெடுப்பதற்கு இராணுவமுகாம்கள் அவசியந்தானா? சோவியத்தில் கொர்பசேவ் ஆட்சிக்கு வந்ததும் முதலில் இராணுவ பலத்தைக் குறைத்தார், சின்னஞ்சிறிய இலங்கைக்கு பெரிய இராணுவம் தேவைதானா? இந்த இராணுவம் மட்டுமல்ல இந்திய இராணுவம்கூட விடுதலைப்போராட்டத்தைஒழித்துவிட்டதா?

தமிழ்ப் பகுதிகளில் கடந்த பல மாதங்களாக அரசியல் சூன்யநிலை. இங்கு சிங்களப் பொலிசாரும் சிங்கள இராணுவமும் இருப்பதால் மோதல்களையே ஏற்படுத்துமென்பது ஆட்சிபீடத்திலுள்ளவர்களுக்குத் தெரியவில்லையே; எதிர்க்கட்சிகளுக்கும் புரியவில்லையே!

இந்நிலையில் அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தைநீங்கும் முயற்சிகளுக்கு இனியும்முட்டுக்கட்டை போடாமலும் வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைத்து புதிய தேர்தல் நடத்துவதற்கு இடையூறு செய்யாமலும் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும்.

மட்டக்களப்பு சம்பவம் பற்றிப் பாராளுமன்றத்தில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா விடுத்த அறிக்கையில் இதை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதி மட்டக்களப்பில் அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரியிருந்தார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் அரசியல் சூன்யநிலையை நீக்கி விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்தில் சேர்ந்துகொள்ள வழிவகுக்கவும் இப்பகுதிகளில் அமைதியும் சாந்தியும் நீடிப்பதற்கு சிங்களப் பொலிசாரை வெளியேற்றி, இராணுவ முகாம்களைமூடுவதற்கும் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை இனியாவது ரஞ்சன் விஜேரத்தினா கேட்பாரென்று எதிர்பார்ப்போம்.

---

தினம், விடுதலைக்காக போராடும் மக்களிடையே காவியமாகிவிட்ட 'சேகுவேரா'வின் ஞாபகார்த்தமாக இக்கட்டுரையை பிரசுரிக்கின்றோம்.

இவரையோ, இவரது புரட்சிகர நடவடிக்கைகளையோ பலவீனப்படுத்தவில்லை. ஏனெனில் நெஞ்சுரம்கொண்ட கெரில்லா வீரர் அவர்.

இவர் தனது இளமைக் காலத்தில் அமெரிக்கக் கண்டம் முழுவதையும் நன்கு அறிந்து வைத்திருந்தார். தனது பயணங்களின்போது அமெரிக்க கண்ட நாடுகளில் அரசியல் நிலவரங்கள், கால நிலை, தரைத் தோற்ற அமைப்பு, என்பவற்றை நன்கு அறிந்து வைத்திருந்தார். தனது இளமைக்காலம் பற்றி குவேரா பின்னாளில் கூறுகின்றபோது இவ்வாறு கூறினார்.

'சுற்றுச் சூழல்களின் காரணமாகவும், எனது இயல்பின் காரணமாகவும் நான் அமெரிக்கக் கண்டம் முழுவதிலும் பயணம் செய்யத் தொடங்கி அதனை நன்கு அறிந்து கொண்டேன்'.

எர்ணஸ்டோ சேகுவேரா 1945இல் கல்லூரிப் படிப்பை முடித்து ப்யூனர்ஸ் அயர்ஸில் மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயின்றார். சில தடங்கல்கள் காரணமாகக் காலதாமதமாகி 1953மார்ச் மாதம் தோல் நோயில் நிபுணர் என்றும் பட்டம் பெற்றார்.

1953ஆம் ஆண்டு யூலை மாதம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஏதேனும் புரட்சியில் பங்கேற்பது என்ற முடிவோடு தனது தாயகமான ஆர்ஜென்டீனாவை விட்டுப் புறப்பட்டார். கம்யூனிச, மார்க்ஷிய நூல்களை நன்கு கற்று தெளிவான, மேலான அறிவைப் பெற்றார். அமெரிக்க ஏகாதிபத்தியம் இலத்தீன் அமெரிக்க நாடுகளைச் சுரண்டி வருவதையும், அடிமைப்படுத்துவதையும் கண்டு கொதிப்புற்றார். ஏதேனும் ஒரு நாட்டில் இவர்களுக்கு எதிரான புரட்சி நடக்குமானால் தான் அதில் பங்கேற்பது என்று உறுதியாக இருந்தார்.

## சேகுவேரா பங்குகொண்ட முதற்புரட்சி

இந்த வகையில் குவாதிமாலாவில் (இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்று) நடைபெற்ற புரட்சியில் பங்கேற்றார். இந்த வீரம் செறிந்த புரட்சியில் வெளிநாட்டவரான குவேராவும், குவாதிமாலா மக்களும், அந்நாட்டு அரசும் ஏகாதிபத்தியவாதிகளால் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டனர். எதிரிகளால் குவேரா கடுமையாகக் கண்காணிக்கப்பட்டார். தன் பாதுகாப்பிற்குப் பாதகமான சூழ்நிலைஉருவாகி வருவதைக் 2 மணிக்கு கியூபாவின் 85 பேரைக் கொண்ட புரட்சிக் குழு கிரான்மாப் பயணத்தை மேற்கொண்டது. இக் காலகட்டத்தில் கியூபாவை ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளில் ஒருவனான பாடிஸ்டா ஆட்சி செய்துவந்தான். கிரான்மா கியூபாக் கரையைத் தொட்டதும் பாடிஸ்டாவின் விமானப்படை கடுமையான குண்டுத்தாக்குதலை மேற்கொண்டது. இதில் தப்பியோடியவர்கள் இறந்தவர்கள் தவிர 15 பேர் மீதமிருந்தனர். குவேராவிற்கு இது ஞானஸ்நானமாக இருந்தது. இதில் குவேரா காயமுற்றார். பின்னர் வந்த காலப்பகுதியில் கெரில்லாக்கள் வளர்ச்சிஅடைந்தனர், முன்னேறினர்.

குவேரா கியூபாவில் தீவிரமாகப் போராடினார். புரட்சிப் படையின் 2 ஆவது அணியின் மேஜராகப் பணியாற்றிய புரட்சியில் மிக முக்கியமான தாக்குதல்களை மேற்கொண்டார். இரண்டு தடவைகள் காயத்திற்கு உள்ளானார். மாபெரும் புரட்சி மக்கள் யுத்தமாய் உருவெடுத்து வீரமுடன் நடந்தது 1959 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாள் கெரில்லாக்களின் போர் வெற்றி அடைந்தது. மேஜர் குவேராவின் கனவு நனவாகியது. புரட்சிகரக் கியூபா மலர்ந்தது. இக் காலகட்டத்திலேயே கியூபா மக்க 'சே' என்ற சொல்லை இணைத்து குவரோவை சேகுவேரா என செல்லமாய் அழைத்தனர்.

## சேகுவேராவின் இறுதிப் பேச்சு

புரட்சியின் வெற்றிக்குப் பின் கியூபாவில் பல பொறுப்புள்ள பதவிகளை வகித்தார். கியூபக் குடியுரிமை வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். நீதி அமைச்சர் உள்ளிட்ட பல பொறுப்புள்ள பதவிகளை வகிக்கும்போது பிரான்ஸ், இந்தியா ரஷ்யா, எகிப்த்து, அல்ஜீரியா, இலங்கை, செக்கோசில வாக்கியா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தார். கியூபாவை சோசலிஷத்திலும், அபிவிருத்தியிலும் முன்னேற்ற பாடுபட்டார்.

கியூபாவில் சார்பில் கொரில்லா மேஜர் எர்ணஸ்டோ சேகுவேராஇறுதியான ஐ நா. சபையில் பேசுகிற போது இவ்வாறு கூறினார். ''இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏதேனும் ஒரு புரட்சி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடக்குமானால் பதிலுக்கு வேறெதுவும் வேண்டாமல், பயன்கருதாமல், யாரையும் பலி கேட்காமல் என் உயிரை தரச் சித்தமாயிருக்கின்றேன்.

பாதையில் இரு புறத்திலும் பலர் புதைக்கப்பட்டார்கள்.

''இன்றைய நிகழ்ச்சிகள் ஆரவாரம் இல்லாமல் நடப்பது போல் தோன்றுகிறது. ஏனெனில் நாமனைவரும் பக்குவப்படுத்தப்பட்டு விட்டோம் ஆனால் நிலைமை அதேமாதிரியாகத்தான் இருக்கிறது. கியூபத்தீவில் புரட்சியோடு என்னை இணைத்து கடமையின் ஒரு பகுதியைத்தான் நான் நிறைவேற்றியிருப்பதாக உணர்கின்றேன். ஆகவே நான் உங்களைவிட்டு எனது தோழர்களை விட்டு எனது சொந்த மக்களாக மாறி விட்ட கியூப மக்களை விட்டு பிரிகிறேன்.

''கட்சித் தலைமை, மந்திரி பதவி, மேஜர்பொறுப்பு ஆகியவற்றை நான் முறைப்படி இராஜினாமா செய்கிறேன் எனக்கு வழங்கப்பட்ட கியூபாப் பிரஜா உரிமையைத் திருப்பித் தருகின்றேன் இனி எனக்கும் கியூபாவிற்கும் முறைப்படியான எந்தஉறவும் இல்லை. ஆனால் எனக்குப் பதவிகளும் பொறுப்பும் அளிக்காத வேறுவகையான உறவுகள் தொடர்கின்றன.

எனது கடந்த காலத்தைப் பற்றி யோசிக்கிற போதுநான் உண்மையாக அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு பணியாற்றி இருப்பதாகவும்புரட்சியின் வெற்றியை நிலைநிறுத்தப் பாடுபட்டு இருப்பதாகவும் உணர்கிறேன் நான்ஒரே ஒரு கடுமையான தவறு செய்திருக்கிறேன். சியாரா மாய்ஸ்ட்ராவில் நாம் போராடிய ஆரம்ப நாட்களில் நான் உங்கள் மேல் அவ்வளவு நம்பிக்கைவைத்திருக்கவில்லை என்பது தான் நான் செய்த கடுமையான தவறு. ஒரு தலைவர் ஒரு புரட்சிக்காரர் என்ற முறையில் தங்களது குணங்களை எடைபோடுவதில்நான் மிகவும் மந்தமானவனாகவிருந்தேன். கியூபாவில் வரலாற்றுப்புகழ் மிக்க காலத்தில் நான் வாழ்ந்தேன். உங்களுக்கு அடுத்த நிலையில் இருந்தேன் கரூபியன் நெருக்கடியின் மிகவும் கஸ்டமான நாட்களில் பரபரப்பான நாட்களில் நான் மக்களோடு இருந்தது குறித்து பெருமிதம் கொள்கிறேன்.

அரசியல்வாதி என்ற முறையில் எப்போதும் போலத் தங்கள் திறமைஅற்புதமாய் சுடர் விடுகிறது. தயக்கமின்றி உங்களை நான் ஆதரித்ததற்காக பெருமைகொள்கிறேன். நமது சிந்தனைகள் ஒரே தன்மையாய் இருந்தது குறித்து நான் பெருமையடைகிறேன். விடங்களின் அபாயம் பற்றியும் நெறி முறைகள் பற்றியும் நாம் கொண்டிருந்த கண்ணோட்டங்கள் ஒரே மாதிரி இருந்தன என்பதிலும் நான் பெருமையடைகிறேன்.

இப்போது உலகின் வேறு பாகங்களுக்கு எனது சிறிய

சில்வகை உணர்ச்சிஈடுபாடுகளின்காரணமாகவோ உருவாகுவதில்லை. மாறாக அவர்கள் ஒரு சுரண்டும் அமைப்பின்காரணத்தாலும்நீதிக்காகப் போராடும் மனிதனின் இயல்பான உந்துதலின் காரணமாகவும் உருப்பெறுகிறார்கள்,

மீண்டும் கூறுகிறேன் நான் தொலை தூரத்தில் இருக்கின்றபோது எனது இறுதி நேரங்கள் கணக்கிடப்படுமானால் எனது கடைசி நினைவுகள் கியூபாவின் மக்களைப் பற்றியதாகவும், குறிப்பாகத் தங்களைப்பற்றியதாகவும் இருக்கும். நீங்கள் எனக்குக் கற்றுக்கொடுத்த விஷயங்களுக்காகவும் எனக்கொரு உதாரண புருஷராகத் திகழ்ந்ததற்காகவும் நன்றி கூறுகிறேன். இறுதிவரை உங்களுக்கு உண்மையுடையவனாக இருக்க நான் முயலுவேன். நமது புரட்சியின் வெளியுறவுக் கொள்கையில் எப்போதும் பூரணமாக ஒன்றியிருந்தேன். இன்றுவரை தொடர்ந்து அப்படித்தான் இருக்கின்றேன். நான் எங்கே சென்றாலும், ஒரு கியூபப் புரட்சிக்காரன் என்ற முறையில் எனது பொறுப்புக்களை நான் எப்போதும் உணர்ந்திருப்பேன். அந்த பொறுப்பை நிறைவேற்றும் வகையில் செயலாற்றுவேன் எனது குழந்தைகளையும் எனது மனைவியையும் நான் இங்கே விட்டுச் செல்கிறேன். அவர்களுக்கு என்று நான் ஒரு சொத்தையும் வைத்துச் செல்லவில்லை ஆனால் அது குறித்து விரக்தி அடையவில்லை. மாறாக மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் வாழத் தேவையானவற்றை அரசு அவர்களுக்கு வழங்கும் என்பதனாலும், அவர்களுக்கு கல்வி கொடுக்கும் என்பதனாலும் அவர்களுக்காக நான் எதையும் கேட்கமாட்டேன்.

நான் உங்களுக்கும் நமது மக்களுக்கும் நிறையச்சொல்ல வேண்டும், என்று விரும்புகிறேன். ஆனால் அவ்வ அதீதமாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன் நான் சொல்ல விரும்புகிற அனைத்தையும் வார்த்தைகளினால் வெளிப்படுத்த முடியாது. ஆகவே காகிதத்தை வீணடிப்பதில் பயனொன்றும் இல்லை.

''எப்போதும் வெற்றியே பெறுவோம்! தாய்நாட்டின் விடுதலைஅல்லதுவீரமரணம்! உண்மையான புரட்சிகர ஊக்கத்தோடு உங்களை ஆரத்தழுவுகிறேன் தோழரே''

## போராளியின்இதயம்

புரட்சிக்காரர்கள் இதயமற்றவர்கள், உணர்வற்றவர்கள் சூடற்றவர்கள் என்றெல்லாம் பேசுகிறார்களே அவர்கள் இந்தக் கடிதத்தைப் படிக்கட்டும் ஒரு போராளியின் இதயத்தினுள் மறைந்துள்ள தூய்மைக்கும் உன்னதத்திற்கும் இந்தக் கடிதம் எடுத்துக்காட்டு என

போராடினாரோ அந்த வடபுலத்து ஏகாதிபத்தியத்தின் கூலிப்படை அதிகாரிகள் முன்னிலையில் இராணுவக் கொடுங்கோலர்களால் பல தடவை சுடப்பட்டு கொல்லப்பட்டார்.

இறந்தும் சூடு அடங்காத அவர் உடல் இனம்தெரியாத இடத்தில் புதைக்கப்பட்டது. அச் சந்தர்ப்பத்தில்தான் தாங்கள் கொலை செய்தது சேகுவேராவையா என்பதனை உறுதிசெய்ய அவரின் இரு கைகளையும் மணிக்கட்டோடு வெட்டி எடுத்தனர். குவேராவின் முகவார்ப்பையும் எடுத்தனர். குவேராவை கொலை செய்த இடம் பிற்காலத்தில் புனித தலமாக விளங்கலாம் என அச்சம்கொண்டு பாடசாலையை இடித்து வைத்தியசாலை ஒன்று கட்டினர். குவேராவின் கரத்தையும், முகவார்ப்பையும் இரகசியமாய்ப் பேணிவந்தனர். ஆனால்அந்த புனிதமான புரட்சிக் கரங்கள் எங்கு செல்லக்கூடாது என்று ஏகாதிபத்தியம் எண்ணியதோ அங்கே இவையெல்லாம் போய் சேர்ந்தன. ஆம் கியூபாவின் தலைநகர் ஹவானாவில் இன்று அரச உயரதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில் இவை இருந்து வருகின்றன.

குவேரா ஓர் இளைஞர் தெளிவான சிந்தனை தன்னலம்மறுக்கும் பிடிவாதம் ஆஸ்த்துமா நோய்க்கே உரித்தான மூச்சிரைப்பு, அகன்றநெற்றி அடர்ந்தமுடி, உறுதியானசெம்மையான முடிவுகள், பலம் மிகுந்ததாடை, அமைதியான நடவடிக்கைகள், ஊடுநவிப் பார்க்கும்பார்வை, சாதூர்யம். ஆழ்ந்ததொனி, கம்பீரமான குரல் புரட்சிக்குரிய நடை இவைதான்குவேராவின்குணாதிசயம், தோற்றம். குவேராஒரு செயலூக்கம் மிக்க மார்க்சிய பார்வை கொண்ட கெரில்லா யுத்த நிபுணராக, வீரராக கம்யூனிஸியத்தில் அதிதீவிரம் மிக்க முழுமையான புரட்சிகர மனிதனாக இருந்தார்.

## கல்லறைவாசகம்

குவேராவின் இறப்புப்பற்றி பிடல் காஸ்ட்ரோவிடம் கேட்டபோது அவர்கூறினார். ''கெரில்லா என்ற முறையில் குவேராவிடம் ஏதேனும் பலவீனம் இருப்பின் அது அவரது மிதமிஞ்சிய துணிச்சலும் அபாயம் பற்றி அவருக்கு இருந்த முழு வெறுப்பும் தான்.'' ஆம் குவேரா வீரமமிக்க புரட்சி வீரர் குவேரா தனது கல்லறை வாசகங்களை இவ்வாறு எழுதினார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# தமிழ்நாட்டில் புலிகள் பயிற்சி முகாம் எங்கே இருக்கிறது?

## இடத்தைச் சொல்லுங்கள் என்று கேட்கிறார் கருணாநிதி

(சென்னை)

''தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் முகாம் எதுவுமில்லை என்று நான் முன்பே கூறியிருக்கிறேன். விடுதலைப் புலிகள் முகாம் தமிழ்நாட்டில் இருப்பதாகக் கூறுபவர்கள் அந்த முகாம் எந்த இடத்தில் எந்தப் பகுதியில் அமைந்திருக்கிறது என்று எனக்குநேரடியாகவோ அரசுக்கோ அறிவித்தால் உடன் நடவடிக்கை எடுப்போம்'' என்று தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளிடம் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கும் நட்பும், அனுதாபமும் மத்திய அரசுக்கு விரோதமானதாகாது என்றும் முதல்வர்கருணாநிதி கூறினார்

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு முகாம்கள் இருப்பதாக தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி சமீப காலமாகக் கூறி வருகிறார். சில தினங்களுக்கு முன்னர் பாரதீயஜனதாக் கட்சியின் தமிழ் நாட்டுக் கிளைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துவருவதாகவும் சென்னைக்கருகிலும், வேதாரணியத்துக்கருகில் உதுமலைப் பேட்டையிலும் விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு தங்கள் முகாம்களில் பயிற்சி அளித்து வருவதாகவும் தமிழக அரசு பாராமுகமாக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.


தமது இந்தப் புகாரை மத்திய அரசுக்குத் தெரிவித்து மத்திய புலனாய்வுத் துறை மூலம் இதுபற்றி ஆராயவேண்டுமென்றும் தமதுகட்சித்தலைவருக்கு எழுதியிருந்த கடிதத்தில் கிருஷ்ணமூர்த்தி கேட்டிருந்தார்.

இக் குற்றச்சாட்டுக்களை மறுத்து தாம் அறிந்தவரை தமிழ் நாட்டில் இத்தகைய முகாம் எதுவும் இல்லை என்று பொலிஸ் டைரக்டர் ஜெனரல் துரை தெரிவித்திருக்கிறார்.

## ஆலய பாலஸ்தாபனம்

(சாவகச்சேரி)

மட்டுவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் பாலஸ்தாபன அபிஷேகம், தீபாராதனை ஆகியன இன்று காலை 8. 10- 9. 52 வரை நடைபெறும்.



## லஞ்சம் பெற்றதாக தண்டனை பெறவில்லை

### ஆணையாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை நீர் வழங்குவதில் லஞ்சம் பெற்ற மூவருக்கு தண்டனை என வெளியிடப்பட்ட செய்திக்கு மாநகரசபை ஆணையாளர் விளக்கமளித்துள்ளார் மாநகர சபை உத்தியோகத்தர் ள் நீர் இணைப்பு செய்வதற்கு தேவையான இணைப்புப் பொருட்களை தமது மேல் அதிகாரியின் அனுமதியைப் பெறாமலும், அலுவலகத்திற்கு அறிவிக்காமலும் குறித்த பாவனையாளரிடம் பணம் பெற்று வெளியில் அப்பொருளை வாங்கி அவ் இனைப்பை செய்தமைக்காகவே குற்றம் காணப்பட்டுள்ளனர், இதில் அவர்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்று குறிப்பிட முடியாததாகும். ஆகவே இவர்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்ற குற்றத்திற்காக தண்டிக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று யாழ் மாநகர சபை ஆணையாளர் தமது விளக்கத்தில் குறிப்பிட்டார்.

(லோ)

### கீழ்நிலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈட்டுத்தொகை பெற்றதோடு வீடுகளும்கட்டி முடித்து விட்டார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்தத் தாமதம் ஏற்படுவதற்கு இதைக் கவனிக்க வேண்டியஉத்தியோகத்தர்கள் விடும் தவறுகளே எனவும் குறிப்பிடப் படுகின்றது.

மேலும் இந்த 60 பேரில் 25 பேருடைய விண்ணப்பங்கள் சகலதும் பூர்த்தியான தயார் நிலையில் உள்ளன. அவற்றை மேற்பார்வை செய்துகையொப்பம் இட்டு அனுப்புவதுதான் பாக்கி, ஆனால் இன்னமும் எந்த விண்ணப்பங்களும் அனுப்பப்படவில்லை அதேவேளையில் அலுவலகஉயர் உத்தியோகத்தர்கள் நான்குபேர் தங்களுடைய விண்ணப்பங்களை மட்டும் நேற்று அனுப்பி வைத்துள்ளனர். இவர்கள் இவ்வாறு முந்திக் கொள்வதற்கான காரணம் என்னவெனில் இத்திட்டத்திற்கென வெளிநாட்டுபுனர்

## மருந்து விலைகளைக் குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

மருந்து வகைகளின் விலைகளைக் குறைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ஜோ. பெர்னான்டோ தெரிவித்தார்.

ஒரே மாதிரியான மருந்து வெவ்வேறு விலைகளில் விற்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுஎன்றும் அவர் சொன்னார்.

மருந்து வகைகளை அவற்றின் குறியீடுகளுடன் சிபார்சு செய்யப்படும்போது இந்த நிலைமை ஏற்படுகிறது.

இனிமேல் மருந்து வகைகளை சிபார்சு செய்யும்போது அதன் மருத்துவ பெயர் குறிப்பிட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

## வி.சி கந்தையா காலமானார்



மட்டக்களப்பு தமிழ் அறிஞரான பண்டிதர் வி.சி. கந்தையா செவ்வாய்க்கிழமை தமது இல்லத்தில் காலமானார்.

இவர் பண்டிதப் பட்டம் பெற்று 1970 இல்இருந்து மட்டக்களப்புசிவானந்தவித்தியாலயத்தின் அதிபராக பணி புரிந்தவர்.

பதினாறுக்கு மேற்பட்ட தொகுப்புக்களை எழுதிவெளியிட்டுள்ளார். அண்மையில் மட்டு கலாசாரப் பேரவையினால் மகாவித்துவான் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

## யாழ். மாநகர சபைக்கு இரு வாகனங்கள் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைச்கு இரு வாகனங்கள் புனர்வாழ்வு அமைச்சிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் வாகனங்கள் மாநகர சபைக்குட்பட்ட பகுதிக்குள் சுகாதாரம் மின்சார வெளிச்சமூட்டல் போன்ற சேவைகளை மேற்பார்வை செய்வதற்கு பயன்படுத்தப்படும் என யாழ்.மாநகரசபை அதிகாரி ஒருவர்தெரிவித்துள்ளார். (அ)

## கொழும்பு பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர் விஞ்ஞான முதுமாணி பயிற்சி நெறி

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் ...

பிரிவு, புள்ளிவிபர பிரிவின் கம்பியூட்டர்விஞ்ஞானம்தொடர்பான ...

## நாட்டுக் கூத்துக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழரின் மரபுக் கலையான நாட்டுக் கூத்தை வளப்படுத்தும் நோக்கத்துடன் எதிர் வரும்ஞாயிற்றுக் கிழமை காலை 9. 30 மணியளவில் யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள மறைக் கல்வி நிலைய மண்டபத்தில் நாட்டு கூத்து கருத்தரங்கு ஒன்று நடைபெறும்,

தென்மோடி வடமோடிக் கூத்துக்கள், வசந்தன் கூத்து, காத்தான் கூத்து ஆகியவை பற்றிக் கருத்துரைகள் இடம் பெற உள்ளன.

## கடையிற் சுவாமிகள்

## தமிழ்த்தினப் போட்டி

### சிங்கள

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள இராணுவக்காரராலும் சிங்கள காவல்துறையினராலும் தமிழீழ பகுதியில் அமைதி குறையுமென பல தடவைகளில் நாம் ஸ்ரீலங்கா அரசுக்கு கூறி வந்துள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள காவல் துறையினர் கடந்த இரண்டு மாதங்களுள் பல தடவைகள் பொது மக்களைத் தாக்கியுள்ளனர், 10-6-90 அன்று மட்டக்களப்பிலுள்ள சிங்கள காவல் துறையினர் முஸ்லிம் இளைஞர் ஒருவரைத் தாக்கிவிட்டு முகாமுக்குள் ஓடிவிட்டனர்.

### இணக்கம் கண்டபின் மோசமான தாக்குதல்

அது பற்றி விசாரிக்கச் சென்ற எமது போராளிகள் மீது துப்பாக்கிப் பிரயோகமும் செய்து விட்டு தவறுதலாக நடந்துவிட்டது என்றும்

## சைக்கிள் திருட்டு

போதையில் சைக்கிளை நிறுத்தி விட்டுக்கிடந்தார் ஒருவர் மாமா உறவுமுறை பேசிக்கொண்டு வந்தவர் சைக்கிளை எடுத்துக்கொண்டு மறைந்து விட்டார்

இச்சம்பவம் கடந்த. (10.6.90) ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் கொக்குவில் கிராமசபை அலுவலகத்திற்கு அண்மையில் நடைபெற்றது.

'ஹீரோ' சைக்கிளை அவ்வாறுபறித்தெடுத்தவர் திருநெல்வேலியைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை வீரசிங்கம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

## ஒப்பந்தக்காரர் பதிவு செய்யவும்

கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படும் அரசாங்க ஒப்பந்தக்காரர் அனைவரும் வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் கிளிநொச்சி மாவட்ட கிளைச்சங்கத்தில்

படுவதற்கு இதைக் கவனிக்க வேண்டியஉத்தியோகத்தர்கள் விடும் தவறுகளே எனவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் இந்த 60 பேரில் 25 பேருடைய விண்ணப்பங்கள் சகலதும் பூர்த்தியான தயார் நிலையில் உள்ளன. அவற்றை மேற்பார்வை செய்துகையொப்பம் இட்டு அனுப்புவதுதான் பாக்கி, ஆனால் இன்னமும் எந்த விண்ணப்பங்களும் அனுப்பப்படவில்லை அதேவேளையில் அலுவலகஉயர் உத்தியோகத்தர்கள் நான்குபேர் தங்களுடைய விண்ணப்பங்களை மட்டும் நேற்று அனுப்பி வைத்துள்ளனர். இவர்கள் இவ்வாறு முந்திக் கொள்வதற்கான காரணம் என்னவெனில் இத்திட்டத்திற்கென வெளிநாட்டுபுனர்வாழ்வு உதவியாககுறித்தளவு நிதியே வழங்கப்பட்டுள்ளது. தாமதம் ஏற்படும் பட்சத்தில் சில வேளைகளில்நஷ்டஈட்டுத் தொகை கிடைக்காமலும் போகலாம் என்பதே இவர்களின் இந்த முறையற்ற செயல் கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கு மனக் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம)

---

## மேஜர்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

**எங்கு வேண்டுமானாலும்,எப்போதுவேண்டுமானாலும் மரணம் நம்மைத் திடீரென தழுவட்டும், அதை வரவேற்போம் அதனால்நமது போர்க்குரலை இன்னொருவர் செவிமடுப்பாரென்றால் தமதுஆயுதங்களை எடுத்துக்கொள்ள இன்னொருவர் கைநீட்டுவார் என்றால்நமது இறுதி ஊர்வலத்தை இயந்திரதுப்பாக்கியின் ஓசையினாலும் புதிய யுத்தம் புதியவெற்றியின்ஓசையினாலும் இசையமைத்து பாட மற்றவர் முன்வருவார் என்றால், ஆம்!மேஜர் ஏர்னஸ்டோ சேகுவேரா ஒரு முழுமையான கெரில்லா,என்றென்றும் அவர் போற்றப்பட வேண்டியவரே!**

''புரட்சிக்காரர்கள் நோயின் காரணமாகவோ, அங்கவீனத்தின் காரனமாகவோ அல்லது சிலவகை உணர்ச்சி ஈடுபாடுகளின் காரணமாகவோ உருவாவதில்லை மாறாக அவர்கள் ஒரு சுரண்டும் அமைப்பின் காரணத்தாலும், நீதிக்காகப் போராடும் மனிதனின் இயல்பான உந்துதலின் காரணமாகவும் உருப்பெறுகிறார்கள்''

---

னர், இதில் அவர்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்று குறிப்பிட முடியாததாகும். ஆகவே இவர்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்ற குற்றத்திற்காக தண்டிக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று யாழ் மாநகர சபை ஆணையாளர் தமது விளக்கத்தில் குறிப்பிட்டார். (லோ)

தெரிவித்தார்.

ஒரே மாதிரியான மருந்து வெவ்வேறு விலைகளில் விற்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுஎன்றும் அவர் சொன்னார்.

மருந்து வகைகளை அவற்றின் குறியீடுகளுடன் சிபார்சு செய்யப்படும்போது இந்த நிலைமை ஏற்படுகிறது.

---

### கொழும்பு பல்கலைக்கழகத்தில்

# கம்பியூட்டர் விஞ்ஞான முதுமாணி பயிற்சி நெறி

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கம்பியூட்டர் விஞ்ஞான பிரிவு,புள்ளிவிபர பிரிவின் கம்பியூட்டர்விஞ்ஞானம்தொடர்பான முதுமாணி பயிற்சி நெறி ஒன்று இம்மாதம் 18 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது இரண்டு வருடகால பகுதிநெறி பயிற்சியாகும் பிரிட்டனில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றின் பகுதியுடன் இணைந்து இப்பயிற்சி மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையில் இவ்வாறான பயிற்சி ஆரம்பிக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டப்பிரிவு இதற்காக சுமார் இரண்டு கோடியே 30 லட்சம் ரூபாவில் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளது.

---

## ஆசிரியர் பற்றாக்குறையை வெளியிடுக

(யாழ்ப்பாணம்)

வடபகுதி பாடசாலைகளில் உள்ளஅனைத்துப்பாடசாலைகளும் ஜூன்மாதம் முப்பதாம் திகதிக்குள் தமது பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களின் வெற்றிடம் பற்றிய விபரங்களைக்கல்வித்திணைக்களத்திற்கும்,பத்திரிகைகளுக்குமனுப்பி வைக்கப்பட வேண்டும் என ஒரு சுற்றறிக்கை கல்வியமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ)

---

### உள்ளூராட்சி

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

டமூலம் என்பன சபையில் அமைச்சர்களால் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் நாற்பது வீதமானோர் 18 வயது முதல் 40 வயதிற்கு இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று இச்சட்டமூலம் வகை செய்யும் என்றும் அமைச்சர் கூறினார்.

சுதந்திரக் கட்சி எம்·பி சாகிம்இஸாக் பேசுகையில் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் இந்த வேட்பாளர்களுக்கு வட்டாரங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றார்.

அதாவிட செனிவிரத்தினா எம்'பி பேசுகையில் இந்த வயது எல்லைப்படி வேட்பாளர்களை நியமித்து இளைஞர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்றார்.

---

### மாகாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்தும் செய்வதாக உறுதி அளித்துள்ளார்.

மேலும் மாநகரசபை வேலைகளை விரைவு படுத்தும்படியும் குறிப்பிட்டுள்ளார். (அ)

---

### பொலிஸாரின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்றுகையைத் தொடர்ந்து வவுனியா மன்னார் வீதி காமினி வித்தியாலயத்திற்கு எதிரே உள்ள இலங்கை இராணுவமுகாமில், தங்கியிருக்கும் இராணுவ வீரர்கள் வீதியால் சென்ற பொதுமக்களை தமது பாதுகாப்பிற்காக கைதுசெய்தனர். பின்னர் விடுதலைப் புலிகளின் எச்சரிக்கையை அடுத்து அனைவரும் விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும் (தி)

---

### பரீட்சை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக விண்ணப்பிக்க விரும்புவோர் பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம் கொழும்பு-2 என்ற முகவரிக்கு இம்மாதம் 30 ஆம்திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

---

## நாட்டுக் கூத்துக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழரின் மரபுக் கலையான நாட்டுக் கூத்தை வளப்படுத்தும் நோக்கத்துடன் எதிர் வரும்ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள மறைக் கல்வி நிலைய மண்டபத்தில் நாட்டு கூத்து கருத்தரங்கு ஒன்று நடைபெறும்,

தென்மோடி வடமோடிக் கூத்துக்கள், வசந்தன் கூத்து, காத்தான் கூத்து ஆகியவை பற்றிக் கருத்துரைகள் இடம் பெற உள்ளன.

## கடையிற் சுவாமிகள் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருப்பெரும் கடையிற் சுவாமிகள் சமாதி அடைந்த 100 -வது ஆண்டுநடப்பு ஆண்டாகும் இவ்வாண்டு முழுவதும் ஒவ்வொரு மாதத்திலும் வரும் சுவாமிகள் சமாதியடைந்த சதய நட்சத்திரத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. அவ்வகையில் இன்று பிற்பகல் 5 மணியளவில் கடையிற் சுவாமிகள் தேவஸ்தானத்தில் அனுபூதி மான்களது அருள் நிலையங்கள்'' என்னும் பொருள் பற்றி க. சிவராமலிங்கம் சொற்பொழிவாற்றுவார்.

---

## நீ ஒரு பாசறை நாட்டுக் கூத்து

(யாழ்ப்பாணம்)

நீ ஒரு பாசறை என்ற நாட்டுக் கூத்து இம்மாதம் 26 ஆம் திகதி குருநகர் கலையரங்கில் மேடை யேற்றப்படவுள்ளது. இந்த நாடகம் தற்போது வானொலியில் திங்கட்கிழமைகளில் மாலை 7 மணிக்கு. நடை பெறுகிறது.

அண்ணாவி திரு. அ. பாலதாஸ் இதனை நெறிப்படுத்தியுள்ளார்இந்நாடகத்தில் புதிய பாணியிலான பக்கவாத்தியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருமறைக் கலாமன்ற நடிகர்கள் இதில் நடித்துள்ளனர்.

---

### மத்திய கிழக்கில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ப்பட்டியலையும் இவர்கள் வைத்திருந்தனர். இவர்கள் வசமிருந்த முப்பதுலட்சம் ரொக்கப்பணமும் கைப்பற்றப்பட்டது. கடத்தலை மேற்கொண்ட குற்றத்திற்காக 9 இலட்சம் ரூபா அபராதம் இவர்களுக்குவிதிக்கப்பட்டது. இவர்கள் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள்எனச் சந்தேகிக்கப்படுகிறது.

---

மட்டக்களப்பு தமிழ் அறிஞரான பண்டிதர் வி.சி. கந்தையா செவ்வாய்க்கிழமை தமது இல்லத்தில் காலமானார்.

இவர் பண்டிதப் பட்டம் பெற்று 1970 இல்இருந்து மட்டக்களப்புசிவானந்தவித்தியாலயத்தின் அதிபராக பணி புரிந்தவர்.

பதினாறுக்கு மேற்பட்ட தொகுப்புக்களை எழுதிவெளியிட்டுள்ளார். அண்மையில் மட்டு கலாசாரப் பேரவையினால் மகாவித்துவான் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

## தமிழ்த்தினப் போட்டி ஒத்திவைப்பு

(கொழும்பு)

இம்மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருந்த அகில இலங்கைத் தமிழ்த்தின விழாவும், போட்டிகளும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் போக்குவரத்துச் சேவை சீர்குலைந்திருப்பதன் காரணமாக பின்போடப் பட்டுள்ளன.

### கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதும் இடைவிடாது ஆகாய தரை கடல் தாக்குதல்களை முடுக்கிவிட்டதும் போர் நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க முடியாது இருப்பதாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து தெரிய வருகின்றது.

இதேவேளை பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்னாவினால்விடுதலைப் புலிகளை தீவிரமாக விமர்சிக்கப் பட்டதும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை வரதராஜ பெருமாளுடன் ஒப்பிட்டதும் விடுதலைப் புலிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து அறிய வருகிறது.

---

### நஷ்டஈடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு புனர்வாழ்வு ஒன்றிணைக்கப்பட்ட நிவாரண திட்டத்தின்கீழ் நட்டஈடு வழங்குதல் கூடாது என புனர்வாழ்வு அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை கூறுகிறது.

இதுதொடர்பாக அரச அதிபர்கள் வட கிழக்கு மாகாண புனர்வாழ்வு நெறிப்படுத்தல் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர்.

இதற்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

---

அமைதி குறையுமென பல தடவைகளில் நாம் ஸ்ரீலங்கா அரசுக்கு கூறி வந்துள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள காவல் துறையினர் கடந்த இரண்டு மாதங்களுள் பல தடவைகள் பொது மக்களைத் தாக்கியுள்ளனர், 10-6-90 அன்று மட்டக்களப்பிலுள்ள சிங்கள காவல் துறையினர் முஸ்லிம் இளைஞர் ஒருவரைத் தாக்கிவிட்டு முகாமுக்குள் ஓடிவிட்டனர்.

### இணக்கம் கண்டபின் மோசமான தாக்குதல்

அது பற்றி விசாரிக்கச் சென்ற எமது போராளிகள் மீது துப்பாக்கிப் பிரயோகமும் செய்து விட்) தவறுதலாக நடந்துவிட்டது என்றும் கூறியுள்ளனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிணக்கை அரசும் நாமும் பேசித் தீர்க்க இணக்கம் கண்டோம்.

ஆனால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முகாம்களிலிருந்த சிங்கள இராணுவம் தான் தோன்றித் தனமாக முகாம்களை விட்டு வெளியேறிய போது எமக்கும் சிங்களப்படைக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

அரசும், நாமும் 13-6-90 மதியம் பன்னிரண்டு மணிக்கு போர் நிறுத்தம் செய்ய இணங்கினோம்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு போர்நிறுத்த உடன்பாட்டை மீறியதுடன் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. அத்துடன் தென்பகுதியிலிருந்து மேலும் சிங்களப்படைகளை கிழக்கில் குவித்துவருகின்றது.

சிங்களப் படையுடனான மோதலில் கடந்த மூன்று நாட்களில் வீரமரணமடைந்த 37 தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

---

மறைந்து விட்டார்

இச்சம்பவம் கடந்த. (10.6.90) ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் கொக்குவில் கிராமசபை அலுவலகத்திற்கு அண்மையில் நடைபெற்றது.

'ஹீரோ' சைக்கிளை அவ்வாறுபறித்தெடுத்தவர் திருநெல்வேலியைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை வீரசிங்கம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

## ஒப்பந்தக்காரர் பதிவு செய்யவும்

கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படும் அரசாங்க ஒப்பந்தக்காரர் அனைவரும் வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் கிளிநொச்சி மாவட்ட கிளைச்சங்கத்தில் தமது நிறுவனங்களை பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

20 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பு விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### தொலைபேசி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொலைத்தொடர்பு வசதிகள் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனால் வடமாகாணத்திலிருந்து வெளிப்பகுதி முற்றுமுழுதாக தொடர்பு கொள்ள முடியாது போய் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

---

### ஆசிரியருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதே சமயம் இங்கிருந்து இடம் மாற்றம் பெற்றுச் சென்ற கல்வித் திணைக்கள ஊழியர்கள் உத்தியோகத்தர்கள் சிலர் இந்தப்பணத்தைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. யாழ் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் சிரேஷ்ட அதிகாரி ஒருவரும் ஆறுமாத முற்பணத்தைப் பெற்றுள்ளாராம்.

---


கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்
கிளிநொச்சி

**வெற்றுச்சாக்குகேள்விகோரல்**

மேற்படி எமது சங்கத்தில் 19.000 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. பெறவிரும்புவோர் மீளளிக்கப்படும் பணமாக ரூபா ஐநூறும் (500.00)ம், கேள்விப்பத்திரத்திற்கு ரூபா ஐந்தும் (5.00)ம் சங்கத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும். சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப்பத்திரம் மூலம் 23-06-90ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''பொதுமுகாமையாளர் கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி'' எனும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம், அல்லது நேரில் கையளிக்கவும். கடிதஉறையின் மேல்மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்வி கோரல்'' என எழுதப்பட வேண்டும்.

(B/1166) பொது முகாமையாளர்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.